பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 05 புதன்கிழமை 22.03.2023 கதிர் 133

# உண்மை ஆணைக்குழு பற்றி அறியவே 2 அமைச்சர்கள் தெ.ஆபிரிக்கா பயணம்





நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அடங்கிய இலங்கைக் குழு ஒன்று செவ்வாய்க்கிழமை தென்னாபிரிக்கா புறப்பட்டுச் சென்றது. இந்தக் குழு, இலங்கை அரசு நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 'உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு'வின் பணியை, முறையாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்கான அனுபவத்தைப் பெறுவதற்காகவே சென்றிருக்கின்றது என்று நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சு தெரிவித்துள்ளது. ☞2

## இது ரகசியம் அல்ல!

சிங்களத் தலைவர்கள் ஏமாற்றுவதும் தமிழ்த் தலைவர்கள் ஏமாறுவதும் காலம் காலமாக நடக்கிறது. தந்தைசெல்வா காலத்திலிருந்து கடந்த வாரம் வரையிலும் அது நடக்கிறது. தமிழ்த் தலைவர்களை நம்ப வைத்துக் கழுத்தறுப்பது என்பது சிங்களத் தலைவர்களுக்கு கைவந்த கலை.

ரணில் விக்கிரமசிங்க அப்படிக் கழுத்தறுத்த கதைகளை இந்துப் பகுதியில் தாராளமாகப் பார்த்திருக்கின்றோம். இப்போது - ஏமாற்றியிருப்பவர் சஜித் பிரேமதாச.

கொழும்பில் நட்சத்திர விடுதி ஒன்றில் 1-0 நாள்களுக்கு முன்னர் சஜித்பிரேமதாசவுக்குநெருக்கமானவர்களுடன் ஒருசந்திப்பு இடம்பெற்றது. பல்வேறு விடயங்களுடன் தமிழர்பிரச்சினைக்கானதீர்வு தொடர்பிலும் அதில் கலந்துரையாடப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்தபோது, தமிழர் பிரச்சினைக்கான தனது தீர்வு அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மட்டுமே என்று சஜித் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். 13க்கு மேலே ☞2

## ரணில் - மொட்டு அரசு வெட்கப்பட வேண்டும்

### கடன் தீர்வாகாது என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டு



நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிவிட்டு, சர்வதேசத்திடம் கையேந்தும் நிலையை ஏற்படுத்தியவர்கள், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் ☞2

## உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் நாயண நிதிய முடிவுக்கு வரவேற்பு

இலங்கைக்குபன்னாட்டு செலாவணி நிதியம் கடன் வசதிக்கான அனுமதியை அளித்துள்ளமையை இட்டு உலகவங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன வரவேற்பினை வெளியிட்டுள்ளன.

''இலங்கையில் நுண்பாகப்பொருளாதார உறுதிப்பாட்டையும் கடன்களின் நிலையான தன்மையையும் உறுதிப்படுத்தும் வகையிலான நிதியுதவிச் ☞2

## ரணிலுக்கு மொட்டு சபையில் பாராட்டு



சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெறுவதற்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குஶ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சி பாராட்டு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே, கட்சியின் சார்பில் இந்தப் பாராட்டைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடம்இருந்துகடன்கிடைத்துள்ள நிலையில் ☞2

## 7 பில்லியன் கடன் கிடைக்கும் மத்திய வங்கியும் தெரிவிப்பு

நாட்டின் பொதுக்கடன்களின் நிலைத்தன்மை வெகு விரைவில் உறுதிப்படுத்தப்படுமென இலங்கைமத்திய வங்கி தெரிவித்தது.

இலங்கை மத்திய வங்கி செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர் சபையின் அனுமதியை அடுத்து 7 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இலங்கைக்குக் கிட்டியிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ள 2.286 பில்லியன்டொலர்கள்நிதிக்கு மேலதிகமாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வ தேச நிதியியல் கட்டமைப்புக்களிடமிருந்து கிடைக்கப்பெறவுள்ள நிதியையும் சேர்த்து சுமார் 7 ☞2

## யாழ். பல்கலைக்கழக மாணவர் 100 பேருக்கு இந்திய நிதி உதவி

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ளயாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசினால் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் தலா ஐயாயிரம் ரூபா ஒரு வருட காலத்திற்கு விசேட நிதியுதவிவழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்படவுள்ளது.

இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கவுள்ளார்.

இந்திய அரசின் இந்தத் தீர்மானம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் மத்திய கலாசார மத்திய நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு கடந்த பெப்ரவரி 11 இந்தியப் பிரதமரின்விசேடபிரதிநிதியாக வந்திருந்த மீன்வளத்துறை இணை அமைச்சர் கலாநிதி எல். முருகன் அறிவித்தபடி, யாழ்ப்பாணப் ☞2



### ஐ.எம்.எப். கடன் கிடைத்ததற்கு

## பட்டாசு கொளுத்தி கொண்டாட்டம்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்குக்கடன் அனுமதிகிட்டியுள்ள நிலையில், ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்திதமதுமகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவால் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது என அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இந்நிலையிலேயே ஹட்டன், பதுளை, கொழும்பு, காலி உட்பட நாட்டின் பல பகுதிகளில் ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி, கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல கோணங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

### நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் விவகாரம்:

## தெரிவுக் குழுவின் முடிவுகள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களதும் நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமையை மீறப்படுகின்றதா என்பது தொடர்பில்விசாரணைசெய்து, பரிந்துரைகளைச்சமர்ப்பிக்க நியமிக்கப்பட்டநாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பது தொடர்பான பிரேரணை 32 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றிக் கொள்ள ஆளும் கட்சி முயற்சித்தபோது, பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாலக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார்.

பிரேரணை தொடர்பில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது, பிரேணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும், எதிராக 43 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதற்கமைய, 32 மேலதிக வாக்குகளால்பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஶ்ரீலங்:கா பொதுஜன பெரமுன, ஐக்கிய ☞2

### எல்லாவல நீர்வீழ்ச்சியில் குளித்தபோது

## மூழ்கிய நான்கு பேரில் ஒருவரின் சடலம் மீட்பு

மொனராகலை - வெல்லவாய - எல்லாவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற 4 இளைஞர்கள் நீரில் மூழ்கி காணாமல்போன நிலையில், அவர்களில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

10 பேர் கொண்ட இளைஞர்கள் குழு ஒன்று, செவ்வாய்க்கிழமை முற்பகல் அங்கு நீராடச் சென்றபோது, அவர்களில் 4 பேர் நீரில் மூழ்கி காணாமல்போனார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை, காத்தான்குடி மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த, 20 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களே காணாமல் போனார்கள் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவரின் சடலம் ☞2

### இந்திய மீனவர்களுக்கு இலங்கையில் அனுமதி வழங்குவதை எதிர்த்து

## வடமாகாண மீனவர்கள் நாளை மன்னாரில் பெரும் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவதைக் கண்டித்தும் அதனை நிறுத்த வலியுறுத்தியும் வடமாகாண கடற்தொழிலாளர்கள் நாளை வியாழக்கிழமை மன்னாரில் பெரும்போராட்டம் நடத்தவுள்ளனர்.

இதற்கு அனைத்து மீனவர்களும்அரசியல்வாதிகளும் பொதுஅமைப்புக்களும்பொது மக்களும் ஆதரவு வழங்க வேண்டுமெனயாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சாமாசங்களின்சம்மேளனத்தலைவர் அன்னலிங்கம் அன்னராசா வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணம பாசையூரில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் உட்பட எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில்மாகாணத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்மீனவ சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் ☞2

## எரிபொருள் விலை ஏப்ரலில் குறையும்

### அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

நாட்டில்நடைமுறையில் உள்ள எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைய ஏப்ரல் மாதம் எரிபொருள் விலை குறைக்கப்படும் என்று மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் ☞2

## இந்துக் குருமார்கள் நேற்று மட்டக்களப்பில் போராட்டம்

### இந்து மதத்தையும் தெய்வங்களையும் இழிவுபடுத்துவதை எதிர்த்து



இந்து மதத்தையும் தெய்வங்களையும்சமூக வலை தளங்கள் ஊடாக இழிவுபடுத்துவதை கண்டித்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் செவ்வாய்க்கிழமை இந்துக் குருமார்கள் கண்டன ஆர்பாட்டம் செய்தனர்.

கிழக்கிலங்கைஇந்து குருமார் ஒன்றயத்தின் தலைவர் கணேசாலோக நாத குருக்கள் தலைமையில் காந்தி பூங்காவில் ஒன்றிணைந்த இந்துக் குருமார்கள் பலர் இந்தப் போராட்டத்தைநடத்தினர்.

மத ஒற்றுமையை சீர்குலைக்காதே, எந்தமத கடவுள்களையும் அவமதிக்காதே, எமது வழிபாட்டு தெய்வங்ளை இழிவுபடுத்திய மத போதகருக்கு எதிராக சட்டநடவழிக்கை எடுக்கவும், கட்டாய மத மாற்றத்தை தடைசெய், போன்ற வாசகங்கள் எழுதப்பட்டபதாகைகளை ஏந்தியவாறு ஓம்.... ஓம்.... ஓம்.... என்று ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தான் போகவே மாட்டார் என்றும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

அங்கிருந்த ஒருவர் அப்படியானால் அது குறித்து மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கலாமே என்று கேட்டிருக்கின்றார். அதற்கு, தான் அப்படி ஒருபோதும் செய்யமாட்டேன் என்றும் அப்படிச் செய்தால் தனக்கு தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்காமல் போய்விடும் என்றும் சஜித் விளக்கமளித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது - சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படுவதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அவர் சந்தித்தபோது, ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கவுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை தெளிவாகவும், பகிரங்கமாகவும் தெரியப்படுத்த வேண்டும். அப்போது தான் கூட்டமைப்பு என்ன முடிவை எடுக்க வேண்டுமென்பதை தீர்மானிக்க முடியுமென கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார்.

அதன்படி தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணப்படும் என்பது விரிவாகவும் அரசியல் தீர்வு குறித்து சாராம்சமாகவும் அந்தக் கொள்கை விளக்க உரையில் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாசவுக்கு அந்தத் தேர்தலில் ஆதரவு வழங்கியது. தேர்தல் விஞ்ஞாபனத்தின் கடைசி நேரத்தில் கூட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் வலியுறுத்தலின் பேரில் தீர்வு குறித்த சில குறிப்பட்ட வாசகங்கள் இடம்பெற்றிருந்தன என்கிற ஞாபகம் எனக்கு உண்டு.

அப்போதிருந்த நிலையில் சஜித் ஜனாதிபதியானால் அவற்யெல்லாம் நிறை வேற்றுவார். சமஷ்டி அடிப்படையில் தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்குத் தருவார் என்று தமிழ்த் தலைவர்கள் நம்பினார்கள். அப்படித்தான் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவையும் நம்பினார்கள். அவரது ஆட்சி வீழ்ந்துவிடாமல் முட்டுக் கட்டை போட்டுக் காத்தார்கள். ஆனால் கடைசியில் அவரர்கள் எல்லோருமே ஏமாற்றினார்கள். அந்த வரிசையில் கடைசி ஆள் சஜித். அந்த வரிசை சஜித்துடன் முடிவடைந்துவிடாது என்பதுதான் தமிழர்களின் தலைவிதி.

- இடிமின்னல் -

## உண்மை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்னதாக, இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஆணையர் எஸ்.ஈ.ால்க், தென்னாபிரிக்காவுக்குச் சென்று அங்கு உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் அனுபவத்தைப் பெறுமாறு விசேட இராஜதந்திர அழைப்பொன்றை விடுத்திருந்தார்.

இதேவேளை, தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தேசிய ஒற்றுமை அரசால், இனவெறி ஆட்சியின் போது கடத்தல்கள், கொலைகள் மற்றும் சித்திரவதைகள் உட் பட ஒட்டுமொத்த மனித உரிமைமீறல்களை விசாரிக்க அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரணில் - மொட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெற்றுள்ளதைப் பட்டாசு கொளுத்திக் கொண்டாடுகின்றார்கள். உண்மையில் ரணில் - மொட்டு அரசு வெட்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், கடன் பெற்று பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பைத் தொடர்ந்து உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கடன் பெற முடியும் என ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். அவ்வாறாயின் நாடு தொடர்ந்து கடன் சுமைக்குள்தான் இருக்கும்.

உற்பத்தித் துறையை மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கம் அரசுக்குக் கிடையாது. தற்காலிக தீர்வு மாத்திரம் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் சமூகக் கட்டமைப்பில் நிலையான மாற்றம் ஏதும் ஏற்படாது. கடன் பெற்று பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது - என்றார்.

## உலக வங்கி, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செயற்திட்டத்துக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதியளித்துள்ளமையை வரவேற்கின்றோம். அதேவேளை இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும், நேர்மறையான மாற்றத்துக்கும் அவசியமான ஆதரவை உலக வங்கி தொடர்ந்து வழங்கும்" என்று உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியப் பிரதித் தலைவர் மார்டின் ரெய்ஸர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம் அதன் உத்தியோகபூர்வ கீச்சகப் (ட்விட்டர்) பக்கத்தில், இலங்கை தொடர்பில் பன்னாட்டுச் செலாவணி நிதியம் வெளியிட்டுள்ள அறிவிப்பை வரவேற்கின்றோம். இலங்கையர்களுக்கு உதவும் நோக்கில் ஒன்றிணைந்து பணியாற்றிய கடன் வழங்குனர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். கடன் மறுசீரமைப்பு, நிதியியல் ஒத்துழைப்பு, மறுசீரமைப்புச் செயன்முறைகளின் அமுலாக்கம் உள்ளிட்ட விடயங்களில் இலங்கைக்கான எமது ஆதரவு தொடரும்" என்று குறிப்பிட்டுள்ளது.

## ரணிலுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடம் இருந்தும் உதவிகள் கிட்டும் என நம்புகின்றோம். அதன் மூலம் நாட்டுப் பொருளாதாரம் மேம்படும் என எதிர்பார்க்கின்றோம்.

மக்களின் வாழும் உரிமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அமைச்சரவை மாற்றம் இடம்பெற்று எமக்கு பதவிகள் வழங்கப்பட்டால் ஏற்போம். மாறாக அமைச்சுப் பதவிக்காக நாம் அலைந்து திரியவில்லை. - என்றார்.

## 7 பில்லியன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பில்லியன் டொலர்கள் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது மனிதவளம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் முதலீடு செய்வதொன்றே தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியிலிருந்து நிரந்தரமாக மீள்வதற்கும், நீண்டகால பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்வதற்குமான வழிமுறையாகும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதிய கடனைத் தொடர்ந்து இலங்கைக்கு 7 பில்லியன் டொலர் கடன்கள் கிடைக்கும் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் செவ்வாய்க்கிழமை நாட்டு மக்களுக்கான தனது உரையில் தெரிவித்திருந்தார்.

## யாழ். பல்கலை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு விசேட நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அசு முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்படும் ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களில் இருந்தும் இளநிலைப் பட்டதாரி மற்றும் பட்ட பின் மாணவர்கள் இத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்படலாம்.

நான்கு இளநிலை மாணவர்களுக்கு ஒரு பட்டப்பின் படிப்பு மாணவர் என்ற அடிப்படையில் தெரிவு இடம்பெறும். இதற்கென இந்தியத் தூதரகத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கமைய பொருளாதார நிலையில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் பற்றிய இந்தியத் தூதுவரின் கடிதம் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் பேராசிரியர் கே. சசிகேஷ் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித்தது.

## தெரிவுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் கூட்டணி மற்றும் மேலவை இலங்கை கூட்டணி ஆகிய கட்சிகள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பன வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை.

## மூழ்கிய நான்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனையவர்களைத் தேடும் நடவடிக்கையைப் பொலிஸாரும், மக்களும் இணைந்து தொடர்ந்து முன்னெடுத்தனர். இரவானதால் மீட்புப் பணி இடைநிறுத்தப்பட்டது.

இதற்கு முன்னர், மொனராகலை - வெல்லவாய - எல்லாவல நீர்வீழ்ச்சியில், பல்வேறு சந்தர்ப்பங்களில் 11 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

குறித்த பகுதி, ஆபத்து மிக்கது எனப் பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அங்கு நீராடச் சென்ற இளைஞர்களில் சிலர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல்போயினர்.

## வடமாகாண ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரகாரம் போராட்டம் நடத்த இருக்கிறோம்.

நாளை மன்னாரில் ஆயிரக்கணக்கானவர்களை திரட்டி அந்தப் போராட்டம் இடம்பெறும். தொடர்ந்து மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களிலும் போராட்டம் நடத்தப்படும்.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது குறித்து வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றில் பேசி இருக்கின்றார். அவ்வாறு இல்லை என்று கடற்தொழில் அமைச்சர் உட்பட சிலர் வெளியில் கூறினாலும் நாடாளுமன்றில் இதனை யாரும் கூறவில்லை. ஆகையினால் இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்பதை நாடாளுமன்றத்திலேயே தெரிவிக்க வேண்டுமெனக் கோருகின்றோம்.

அதேபோன்று கடலட்டைப் பண்ணைகளால் பல்வேறு பாதிப்புக்களைப் பலரும் எதிர்நோக்கி வருகின்றனர். இந்தக் கடலட்டைப் பண்ணைகளைச் சீனாவிற்கு வழங்குவதையும் எதிர்க்கிறோம்.

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் தொடர்ச்சியாக மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருவதால் மீனவ சமூகம் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறது. இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஆட்சியாளர்கள் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு தரவேண்டும் என்று வலியுறுத்தி முதற்கட்டமாக மன்னாரில் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதற்கு கடற்தொழிலாளர் சங்கங்கள் சமாசங்கள், சம்மேளனங்கள், அரசியல்வாதிகள் பொது மக்கள் என அனைவரிடமிருந்தும் ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

மேலும் இலங்கை - இந்திய கடற்தொழிலாளர் விவகாரத்தில் அரசுகளின் செயற்பாடுகள் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றது. ஆனால் எது எவ்வாறிருப்பினும் நாங்கள் எங்களுக்குள் முரண்பாட்டை அல்லது வன்முறையை ஏற்படுத்தாமல் நல்லெண்ண அடிப்படையில் சுமூகமாகப் பேசித் தீர்க்கவே விரும்புகின்றோம் - என்றார்.

## எரிபொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சட்ட ஒழுங்குவிதிகள், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஒதுக்கீட்டு சட்டக்கட்டளை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

மக்களாணை இல்லாத ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான ஆட்சிக்கு சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது என்று எதிர்க்கட்சிகள் முன்வைத்த குற்றச்சாட்டு தற்போது பொய்யாக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எமது ஆட்சி அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சிக்கு ஆட்சியாளர்கள் எடுத்த கடுமையான தீர்மானங்கள் வெற்றிப் பெற்றுள்ளன. நெருக்கடியான சூழ்நிலையில் ஆட்சியைப் பொறுப்பேற்காமல் தப்பித்துச் சென்றவர்கள் தற்போது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக சேறு பூசுவதை கண்டுக் கொள்ளப்போவதில்லை.

கனிய வளங்கள் தொடர்பான ஆய்வுகள் நீண்ட காலமாக நாட்டில் நடைபெறுகின்றன. இந்நிலையில் இது தொடர்பில் ஒழுங்குவிதிகளை தயாரித்து நாங்கள் முன்வைத்துள்ளோம். இதன் மூலம் தேவையான முதலீட்டாளர்களை நாட்டுக்குள் அழைத்து வருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

வளங்களைப் பயன்படுத்தாது வைத்திருக்க முடியாது. அதன் மூலம் ஏதாவது நன்மையை பெற்றுக்கொள்ள வேண்டும். ஒழுங்குவிதிகளை நிறைவேற்றிய பின்னர் உலக முதலீட்டாளர்களுக்கு குறித்த இடங்களில் ஆய்வுகளை நடத்த முடியும்.

இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து நாணயக் கடிதங்களை இனி திறக்க முடியும். இதன்படி குறைந்த விலையில் விநியோகங்களை மேற்கொள்ள முடியுமாக இருக்கும். நாங்கள் எரிபொருள் விலை சூத்திரத்தை செயற்படுத்துகின்றோம்.

ஒவ்வொரு மாதமும் அதனைச் செய்கின்றோம். இப்போது மசகு எண்ணெய் விலை குறைவடைகின்றது. ரூபா பலமடைகின்றது. இதன்படி ஏப்ரல் மாதமளவில் திருத்தத்தின்போது மக்களுக்கு அனுபவிக்கக்கூடிய நிவாரணத்தை வழங்க நடவடிக்கை நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் மின்சாரக் கட்டணத்திலும் நிவாரணங்கள் கிடைக்கும். ஜனவரியில் விலை மறுசீரமைப்பை செய்திருந்தால் ஜுன் மாதமளவில் நிவாரணத்தை வழங்கியிருக்க முடியும். எப்படியும் டிசெம்பருக்குள் மின்சார கட்டணத்திலும் நிவாரணம் கிடைக்கக்கூடிய வேலைத் திட்டங்களைச் செய்யமுடியும். பொருளாதார முன்னேற்றத்தின் பயனை நாட்டு மக்களுக்கு நிச்சயம் வழங்குவோம்.

நட்டமடையும் அரச நிறுவனங்களான இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம், இலங்கை மின்சார சபை ஆகிய நிறுவனங்கள் நிச்சயம் மறுசீரமைக்கப்படும் - என்றார்.

## இந்துக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மந்திரம் செய்தவாறும் ஒரு மணித்தியாலம் அவர்கள் கண்டன ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தமது போராட்டம் தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது -

அண்மைக் காலமாக சமூகவலைத்தளங்களிலும் சுவரெட்டிகளிலாலும் இந்து மதத்தையும் கடவுள்களையும் சில போதகர்கள் இழிவுபடுத்தி வருவதுடன் கட்டாய மதமாற்றத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்

இந்த நாட்டிலே மதசுதந்திரம் இருந்தாலும் கூட பிற மதத்தை தூசிப்பதோ இழிவுபடுத்துவதோ அனுமதிக்கப்பட்டதல்ல. ஒருவர் தன்னுடைய மதத்தை வளர்த்தெடுப்பதிலே யாரும் குறுக்கிட முடியாது. ஆனால் அடுத்தவர் மதத்தை இழிவுபடுத்தக்கூடாது.

நாங்கள் பிற மத கடவுள்களை துசித்தோ, தகாதவார்த்தைகளைப் பயன்படுத்தியோ நாங்கள் இதுவரை காலமும் எமது சைவசமயத்தை வளர்த்ததில்லை. ஆனால் சில மத போதகர்கள் மத ஐக்கியத்தையும் நல்லுறவையும் சீர்குலைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். எமது மதத்தையும் எமது தெய்வங்களையும் தகாத வார்த்தைகளால் தூசிக்கிறார்கள். மத போதகர்கள் என்கின்ற போர்வையிலே எமது மக்களின் மனங்களை சுக்குநூறாக உடைத்து அவர்களை வேதனைப்படுத்தி மதங்களுக்கிடையே இன முரண்பாட்டை தோற்றுவிக்கிறார்கள். இதனை கிழக்கிலங்கை இந்து குருமார் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நாங்கள் எவரையும் சீண்டுபவர்கள் அல்லர். எமது மதத்தை யார் இழிவுபடுத்தினாலும் இனி அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்போம். மத சுதந்திரம் அனைவருக்கும் சமமானது. அதற்காகப் பிற மதத்தை தூசிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை. எனவே காவல்துறை எமது மதத்தை இழிவுபடுத்திய போதகருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.















காலைக்கதிர்
Kalaikkathir

# ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தீர்மானிக்கப்பட்டபடி நடக்கும்!



## கூறுகிறார் கல்வி அமைச்சர்

ஆசிரியர்களுக்கான இடமாற்றம் தீர்மானிக்கப்பட்டதன்பிரகாரம் வழங்கப்பட்டு வருவகின்றன. ஒரு தொகை ஆசிரியர்களுக்கான இடமாற்றக்கடிதம்தபாலிடப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்ற கடிதம் சில மாதங்களில் அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிசேடகூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அமைச்சர்மேலும்தெரிவிக்கையில் -

ஆசிரியர் இடமாற்றத்தில் தன்னிச்சையான எந்த செயலும் இடம்பெறவில்லை. இடமாற்றங்கள்தீர்மானித்தபடியே வழங்கப்படுகின்றன.

2020, 2021, 2022 ஆகியமூன்றுவருடங்களிலும் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. அதனால் கடந்தவருடமளவில் 14, 500 விண்ணப்பங்கள் கல்வி அமைச்சுக்குகிடைத்துள்ளன.

அதற்கான இடமாற்ற சபையொன்று நடைமுறையில் உள்ளது. அமைச்சின் பணிப்பாளர்கள்மற்றும்தொழிற்சங்கத்தினரும் அந்த சபையில் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில்இரண்டு விதமாக ஆசிரிய இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று சாதாரணமாக கோரப்படும் இடமாற்றம். நீண்ட காலமாக கஷ்டப்பிரதேசங்களில்சேவையில் ஈடுபடுபவர்களும் இதில் உள்ளடங்குவர்.

மற்றது2017ஆம்ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானியை அடிப்படையாகக் கொண்டது.

அந்த வகையில் 10 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம்வழங்கப்படுவதை அடிப்படையாக வைத்தே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டில் இருந்தே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் கடந்த மூன்று வருடங்களில் கொரோனா சூழ்நிலை காரணமாக இது இடம்பெறாததால் அனைத்தையும் ஒன்றாகத் தற்போது எடுத்துள்ளோம். அந்த வகையில் மொத்தமாக 8893 இடமாற்றங்களுக்கான அனுமதி இடமாற்ற சபை மூலம் கிடைத்துள்ளது.

இதில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் 681 பேர் அடங்குகின்றனர். அதில் 388 பேருக்கான இடமாற்ற கடிதங்கள் தபாலில் இடப்பட்டுள்ளன. மீதமானவை உடனடியாகவே தபாலில் இடப்படும்.

சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் பத்து வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் சேவையாற்றி கட்டாய இட மாற்றத்துக்காக இருப்பவர்கள்.

எனினும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களும் இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களும் எதிர்வரும் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை இடம் பெறவுள்ளதால் மாணவர்களின் நன்மை கருதி அந்த இடமாற்றத்தை அதன் பிறகு மேற்கொள்ள மேல்முறையீடு மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதனால் அது தொடர்பான விடயம் ஆலோசனை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவ்வாறு சம்பந்தப்படும் ஆசிரியர்களுக்கு ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் இடமாற்றம் வழங்கவும் ஏனைய ஆசிரியர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க பாடசாலை விடுமுறை முடிவடைந்ததும் ஏப்ரல் மாதத்தில் இணைவதற்கான கடிதம் அனுப்பப்படும். எவ்வாறாயினும் இந்த பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணப்பட்டு விட்டது. - என்றார்.

# கண்டியில் வெள்ளம், மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் காணி

## அரசாங்கம் நடவடிக்கை

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நாவலப்பிட்டி பஸ்பாகே கோரளே ஹைஹன்போர்ட் தோட்டக்காணியில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்துக்கு உள்ளானவர்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளே பிரதேசத்தில் அமைந்துள்ள 566 ஏக்கர்களுடன் கூடிய ஹைஹன் போர்ட் தோட்டக்காணி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை கருத்திற்கொண்டு, குறித்த காணியில் 200 ஏக்கர் காணியை வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்துக்கு உள்ளானவர்களுக்கு மற்றும் அவ்வாறான இடர்களுக்கு ஆளாகக்கூடிய அதிக ஆபத்தான வலயங்களில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஊழல் அரசுகளைப் பிணை எடுப்பதுவே சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கம்!

## ரில்வின் சில்வா கடுமையாகச் சாடல்



சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவி திட்டத்தை கடுமையாக விமர்சித்துள்ள ஜே.வி.பி ஊழல் அரசாங்கங்களை பிணையெடுப்பது மாத்திரமே சர்வதேச நாணயநிதியத்தின் நோக்கம் எனத் தெரிவித்துள்ளது.

ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் தற்போது அனுமதியளித்துள்ள 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் இலங்கையின் கடன் சுமையை மேலும் அதிகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தசாப்த காலப் பகுதியில் அனுபவித்த மிக மோசமான நாணய நெருக்கடி காரணமாக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு இல்லாமலிருந்த அமைச்சர்களுக்கு தற்போது சர்வதேச நாணயநிதியத்தின கடனைத் தொடர்ந்து புதிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதுஎனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹஜ் யாத்திரை ஏற்பாட்டுக்காக தனி அலுவலகம் நேற்று திறப்பு

ஹஜ் யாத்திரைக்கான ஏற்பாடுகளை எவ்வித சிக்கல்களுமின்றி நேர்மையாக முன்னெடுப்பதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்துள்ளது என புத்த சாசன சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

இதற்கெனவே முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் தனியான அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை கொழும்பு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் ஹஜ் விவகாரங்களுக்கென தனியான அலுவலகமொன்றினைத் திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரைகாலமும் ஹஜ் விவகாரங்களுக்கென தனியான ஓர் அலுவலக இருக்கவில்லை. இதனால் ஹஜ் யாத்திரிகர்கள் பலசிரமங்களை எதிர்கொண்டனர். மக்களின் சிரமங்களைத் தவிர்ப்பதற்காகவே இந்தக் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அனைத்து முஸ்லிம்களுக்கும் கட்சி வேறுபாடுகளின்றி இந்த ஆட்சி சேவைகளை வழங்கும். தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும்.

எந்தவொரு மதத்திலும் பிரிவினைகள் போதிக்கப்படவில்லை. இவற்றைக் கடந்து நாம் பயணிக்கவேண்டும். அவர்களின் மதவழிபாடுகளை முழுமையாக நிறைவேற்ற எம்மால் முடிந்தளவு ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும்.

முஸ்லிம்கள் தங்களது மத வழிபாடுகளில் ஈடுபடும் போது பிரச்சினைகள் எழவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இது தொடர்பில் ஆராயப்படும்.

கடந்தவருடம் கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக குறிப்பிட்ட சிறிய தொகையினருக்கே ஹஜ் வாய்ப்புக் கிட்டியது. இவ்வருடம் இலங்கைக்கு 3500 ஹஜ் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஹஜ் முகவர் நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சை தற்போது நடைபெற்று வருகிறது.

நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அடுத்த வாரம் ஹஜ் முகவர்கள் நியமனம் வழங்கப்பட்டு ஹஜ் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும். முகவர்கள் வழங்கும் சேவைக்கேற்ப ஹஜ் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும். இது தொடர்பான விபரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் - என்றார்.

# 40 பயணிகளுடன் சென்ற தனியார் பஸ் தீப்பிடித்தது!

## உயிர்ச்சேதம் இல்லை

ஹொரணை - இரத்தின புரி வீதியில் பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு அருகில் தனியார் பஸ் ஒன்று இன்று காலை தீயில் எரிந்து நாசமானது.

தீ விபத்து ஏற்பட்டபோது பஸ்ஸில் சுமார் 40 பயணிகள் இருந்தபோதிலும், உயிரிழப்பு அல்லது காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவியவுடன் பயணிகள் பஸ்ஸில் இருந்து வெளியேறினர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இரத்தினபுரியில் இருந்து பாணந்துறை நோக்கிப் பயணித்த குறித்த பஸ்ஸின் முன்பகுதி, பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்ட போது தீப்பிடித்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தீவிபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத அதேவேளை, பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# காடுகளைப் பாதுகாப்போம்

நேற்று பன்னாட்டு காடுகள் தினம். ஆனால் தமிழ்ப் பரப்பில் அது பற்றிய விழிப்புணர்வு ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. காடுகள் குறித்த விழிப்புணர்வு இல்லாத சமூகம் எதிர்காலத்தில் அழிந்து போவதையும் தடுக்க முடியாது. அதிலும் குறிப்பாக இலங்கையில் தமிழர்கள் காடுகள் குறித்து முக்கியமாக அறிந்தும் தெரிந்தும் தெளிந்தும் வைத்திருப்பது முக்கியம். ஏனெனில் இலங்கையில் இன்றிருக்கும் காடுகளில் பெருமளவிலானவை வடக்கு கிழக்குப் பகுதிகளிலேயே இருக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 21 பன்னாட்டு காடுகள் தினமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 2012, நவம்பர் 28 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானம் மூலம் நிறுவப்பட்ட இந்நாளை, பல நாடுகள் பல்வேறு நிகழ்வுகளால் கொண்டாடியும், விழிப்புணர்வு ஏற்படுத்தியும் வருகிறது.

அமேசான் காடுகள் தீப்பற்றி தணியாது எரிந்தபோது உலகத்தின் நுரையீரலே எரிகின்றது என்று உலகம் கதறியது. அந்தளவிற்கு காடுகள் மனித வாழ்க்கைக்கு மிக முக்கியம். ஆனாலும் காடுகளை மிக இலகுவாக அழிப்பதில், அல்லது காடுகள் அழிக்கப்படுவது குறித்து அக்கறைப்படாமல் இருப்பதில் கைதேர்ந்தவர்களாக நாம் மாறியிருக்கின்றோம். இது நமக்கு நாமே தலையில் மண்ணளிப்போடும் செயல்.

ஒரே ஒரு மரம் அழிவதால், பறவை, பூச்சிகள், விலங்குகள் எனக் குறைந்தது, நான்கு வகை உயிரினம் உணவு, இருப்பிடம் இழந்து, அழிகிறது. அப்படியானால் ஒரு காடு அழிவதால் எவ்வளவு உயிரினங்கள் இருப்பிடம் இழக்கும்? அழியும்?

இவ்வாறு விலங்குகள், பறவைகள் பூச்சிகள் அழியும்போது அது உணவுச் சங்கிலியில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். தேனீகளும் வண்ணத்துப்பூச்சிகளும் இல்லையென்றால் இவ்வுலகமே இல்லை என்பது நாம் அறிந்ததே. இநத சுழற்சி ஒரு நாள் மனிதர்களில் வந்து நிற்கும். இதனாலேயே காடுகளும் அதிலுள்ள பல்லுயிர்களும் முக்கியமானவை.

காடுகள் அழிவதால், பருவமழை பொய்க்கும். பல நுண்ணுயிர்கள் அழியும். உணவுச்சங்கிலி அறுபடும். சூழல் மாசு அதிகரிக்கும். காற்றில் உயிர்வாயுவின் அளவு குறையும். மண்சரிவு ஏற்படும். நிலத்தடி நீர் குறையும். தட்பவெப்ப சமநிலை பாதிப்படையும். புயல் அதிகரித்து சேதம் உண்டாகும். மரம் சார்ந்த தொழில்கள் நலிவடையும். இவையெல்லாம் உடனடி சிக்கல்கள். ஆனால் இது காலப்போக்கில் நீடிக்கும் போது விளைவுகளும் இன்னமும் கடுமையானதாக மோசமானதாகவே இருக்கும்.

உலகம் முழுவதும் ஆண்டுக்கு 13 மில்லியன் கெக்டேயர் காடுகள் அழிக்கப்படுகின்றன என்கிறது ஐக்கிய நாடுகள் அவை. கிட்டத்தட்ட இங்கிலாந்து நாட்டுக்கு நிகரான நிலப் பகுதியில் காடுகள் அழிக்கப்படுகின்றன. உலகில் இப்போது –30 சதவீதமான பகுதிகள் காடுகளால் சூழப்பட்டிருக்கின்றன. அவற்றில் 6 – 0 ஆயிரத்துக்கும் அதிகமான வகை மரங்கள் இருக்கின்றன. எண்ணுக்கணக்கற்ற உயிரிகள் வாழ்கின்றன. காடுகளும் பல்வகை உயிரிகளும் ஆரோக்கியமாக இருந்தால்தான் மனித இனமும் இங்கு பாதுகாப்பாக இருக்க முடியும்.

அதனால்தான் இந்த ஆண்டுக்கான பன்னாட்டுக் காடுகள் தின வாசகமாக "ஆரோக்கியமான மக்களுக்காக ஆரோக்கீயமான காடுகள்" என்பதை ஐ.நா. அறிவித்துள்ளது.

காடுகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு அவற்றைக் காப்போம். காடுகளை அழிப்பவர்களை இனங்கண்டு அவர்களைத் தடுப்போம். எதிர்காலச் சந்ததியினர் வாழ்வதற்காகவும் இந்த உலகை மிச்சம் விட்டுவைப்போம்.

# கிழக்கு இலங்கையில் திருமந்திர அரண்மனை




உலக அதிசயமாக கிழக்கிலங்கையில் சிவபூமி திரு மந்திர அரண்மனை திறந்துவைக்கப்படவுள்ளது என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது –

கிழக்கிலங்கை வரலாற்றில் சிவபூமி திருமந்திர அரண்மனை மார்ச் மாதம் 24 ஆம் திகதி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இலங்கை சிவபூமி அறக்கட்டளையால் நிறுவப்பட்டுள்ள திருமந்திர அரண்மனை சம்பிரதாய பூர்வமாகத் திறந்த வைக்கப்படவுள்ளது.

3 ஆயிரம் தமிழ் பாடல்கள் பல நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த வரலாற்றுப் பெட்டகமான திருமந்திரத்தைகையால் உள்கொண்டு மூன்று ஆண்டுகளாக இளைஞர்கள் கருங்கல்லில் செதுக்கியுள்ளனர்.

இந்தப்பாடல்களை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள திருமந்திர அரண்மனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

108 சிவலிங்கமும் நடுவில் கருங்கல்லினால் ஆக்கப் பட்ட கோவிலில் முகலிங்கப்பெருமானும் கிழக்கிலங்கையில் முதல் முதலாக வித்தியாசமான முறையில் காட்சியளிக்கின்றது.

கிழக்கிலங்கையில் தானாகத் தோன்றிய தான்தோன்றீஸ்வரர் போத்துக்கேயர் அந்த இடத்துக்கு வந்தபோது இந்த மாடு கருங்கல் மாடு சாணிபோடுமா என்று கேட்ட போது அந்த மாடு எழுந்து நின்று போட்ட சாணி கருங்கல் சாணியாக இன்றைக்கும் பாதுகாக்கப்படுகின்றது.

போர்த்துக்கேய தளபதிகளே இந்தக் கோவிலை பெருமையாக நினைத்து வழிபட்ட மரபு இன்றும் பேசப்படுகின்றது. அந்த இடத்தில் தோன்றிய தான்தோன்றீஸ்வரர் ஆலயம் கிழக்கிலே பிரமாண்டமான கோவில் பல லட்சம் மக்கள் ஒன்றுகூடுகின்ற அந்தக் கோவிலில் இப்போது யாழ்ப்பாணத்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள இந்த அறக்கட்டளை சிவபூமி அறக்கட்டளை பல லட்சம் ரூபா செலவில் அந்தத் திருமந்திர அரண்மனையை அமைத்துள்ளார்கள்.

திருவாசக அரண்மனையை நாவற்குழியில் அமைத்து பேணிப் பாதுகாப்பது போன்று கிழக்கிலங்கையிலே இந்தப் பணி செய்து கிழக்கிலங்கை மக்களிடமே தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் நிர்வாகத்திடனே இந்தப் பணியை ஒப்படைக்கின்றார்கள்.

இங்கே கருங்கற் கோவிலிலே முகலிங்கம் இலங்கையிலே ஒரே ஓர் ஆலயத்திலே இணுவில் காரைக்கால் சிவன் கோவிலிலே முகலிங்கம் இருக்கின்றது. இப்போது கிழக்கிலங்கையில் மூலக் கருவறையிலே முகலிங்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

108 சிவலிங்கம் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருக்கின்றது. 3 ஆயிரம் திருமந்திரப் பாடல்களும் வாசலிலே அசையாத்தேராக சிற்பத்தேர் ஒன்று உருவாக்கப்பட்டு அந்தத் தேரிலே சிவபெருமானும் திருமந்திரத்தைப் படைத்த திருமூலரும் சிற்பமாக எழுந்தருளச் செய்துள்ளார்கள்.


இது மட்டுமல்ல திருமந்திர அரண்மனைச் சுற்றாடல்கள் புனிதம் பெறக் கூடியதாக அங்கே பல்வேறு விடயங்கள் நிலைநாட்டப்பட்டு சம்பிரதாயபூர்வமாகக் கிழக்கிலங்கைமக்களிடம் கையளிக்கும் நிகழ்ச்சி எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கிழக்கிலங்கை மக்கள் மட்டுமல்ல, அனைத்துசைவ மக்களும் வருகைதந்து உலக அதிசயமான 3 ஆயிரம் பாடல்கள் கருங்கல்லில் பதிக்கப்பட்டுள்ள 1330 திருக்குறள் இந்தியாவில் கருங்கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. திருவாசகம் யாழ்ப்பாணத்தில் 650 பதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உலகத்திலேயே 3 ஆயிரம் தமிழ்ப்பாடல்களை கருங்கல்லில் பதிப்பித்த பெருமை சிவபூமி அறக்கட்டளையைச் சாரும். இதைத்தாங்குகின்ற பெருமை கிழக்கிலங்கை மக்களைச் சாரும். அற்புதமான இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். – என்று தெரிவித்துள்ளார்.

# சங்கிலியன் தோரணவாயில் சீரமைப்பு பணி இரு வாரங்களில் நிறைவுபெறும்

## பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவிப்பு



சங்கிலியன் தோரண வாயில் வேலைகள் இரண்டு வார கால பகுதிக்குள் முடிவடைந்துவிடும். அதன்பின்னர் மந்திரிமனை மீள் உருவாக்க செயற்பாடுகளை ஆரம்பிக்க உள்ளோம். அதற்கான நிதியுதவிகளை மக்களிடம் கோருகிறோம் என தொல்லியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் உள்ள மந்திரிமனை வளாகத்தினுள் உள்நுழைய தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு விளக்கம் கொடுக்கும் முகமாகவே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது –

2010ஆம் ஆண்டு பிராந்திய தொல்லியல் திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டது. குறித்த திணைக்களத்தின் ஆலோசகராகப் பதவியாற்றி இருக்கின்றேன். அதனால் மேற்படி விடயம் தொடர்பில் நான் சில கருத்துக்களைக் கூறலாம் என நினைக்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் 86 இடங்கள் மரவுரிமை இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதில் முதலாவதாக மந்திரி மனை, சங்கிலியன் தோரண வாசல், ஜமுனா ஏரி மற்றும் சங்கிலியன் அரண்மனை ஆகிய இடங்கள் பிரகடனப் படுத்தப்பட்டு அவற்றுக்கான பெயர்ப் பலகையும் அங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவை வர்த்தகமானிலும் வெளியிடப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களம் மரவுரிமை இடங்களாக அடையாளப்படுத்தி அதனை வர்த்தகமானியில் பிரசுரம் செய்தால் நில உரிமையாளர் அங்கு புதிதாக எதையும் மாற்றி அமைக்க முடியாது.

அதே சமயத்தில் தொல்லியல் திணைக்களமும் நில உரிமையாளரின் அனுமதியின்றி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாது. இதனால்தான் மந்திரிமனை உரிய காலத்தில் பேணப்படாமைக்கான காரணமாகும்.

அதேசமயம், தொல்லியல் திணைக்களம் மந்திரி மனை தொடர்பாக மிகுந்த அக்கறையுடன் நில உரிமையாளருடன் பேரம்பேசி அந்த நிலத்தைப்பெற்று அதனை சீர் செய்யும் வசதிகளும் நிலைமைகளும் தற்போது தொல்லியல் திணைக்களத்திடம் இல்லை.

அதனால்தான் நாம் யாழ்ப்பாணத்தில் மரவுரிமை மையம் ஒன்றை உருவாக்கி அதன் முதல் பணியாக சங்கிலியன் தோரண வாசலை மீள் உருவாக்கம் செய்து அது முடிவுறும் நிலையில் இருக்கின்றது.

இரண்டு வாரத்தில் அது முடிவடையும் அதை செய்வதற்கு எங்களுடைய மருத்துவபீட பேராசிரியர் மருத்துவர் ரவிராஜ் 22 லட்சம் ரூபாவை அதாவது அதற்குரிய செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்டார்.

மந்திரி மனையை மீள் உருவாக்கம் செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டபோது அதனுடைய உரிமையாளர் எங்களோடு தொடர்புகொண்டு சில நிபந்தனைகளை விதித்தார். தன்னுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டு தனியாரால் சில கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன எனவும், அவற்றை சட்டநாதர் கோவிலுக்குப் பெற்றுத் தருவதற்கு உதவ வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நாங்களும் முயற்சிசெய்தோம் அது முழுமையாக வெற்றி அளிக்கவில்லை. பின்னர் நாங்கள் அந்த நிலத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு முயற்சி எடுத்தோம். அதனை அவர் தவணை முறையில் பணம் செலுத்திப் பெறுவதற்கு ஒப்புக்கொண்டு பலமாதங்கள் பேசியதன் பின்னர் இப்பொழுது எங்களுக்கு அதற்கான ஒப்புதலைத் தந்திருக்கின்றார்.

நாங்கள் தற்போது அதற்குரிய பணத்தை அவருக்குக் கொடுத்து மீள் உருவாக்க பணியை முன்னெடுத்துள்ளோம். சில ஆரம்பப் பணிகள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறு செய்து கொண்டிருக்கும் பொழுதுதான் நில உரிமையாளர் ஒப்பந்த முடியும் வரை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

இதனால்தான் அந்த இடத்தை தொல்லியல் திணைக்களம் தனியாக மீள் உருவாக்கம் செய்ய முடியாது. அதே நேரத்தில் நில உரிமையாளரும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மரவுரிமைச் சின்னத்தைதான் விரும்பியவாறு எந்த மாற்றத்தையும் மேற்கொள்ள முடியாது.

இப்பொழுது நில உரிமையாளர் எங்களுக்கு நிலத்தைத் தருவதற்கு முழுமையான ஒப்புதல் அளித்திருக்கின்றார். நாங்கள் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் மீள் உருவாக்கம் செய்வதற்கான திட்டங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு அவை தொல்லியல் திணைக்களத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

எனவே சங்கிலியன் தோரண வாசல் வேலைகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர் மந்திரி மனையின் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதனை மேற்கொள்வதற்கு இன்று மக்கள் மத்தியில் அதிருப்தி நிலையில் இருக்கிறவர்களும் பெரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். ஐந்து பேர் நினைத்த உடனே இதை செய்துகொள்ள முடியாது. பலமில்லியன் கணக்கான பணம் அவற்றை மீள உருவாக்குவதற்கு எங்களுக்குத் தேவை. நாங்கள் அந்த பணியை தொடங்குகின்ற பொழுது ஊடகங்கள் ஊடாகவும் அதிருப்தி நிலையில் உள்ள மக்களிடமும் அவற்றை மீள் உருவாக்கம் செய்வதற்கு நிதி உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுப்போம்.

அவ்வாறு செய்கின்ற பொழுது அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்ய முடியும் என்பது தான் உண்மையான நிலைப்பாடு. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பல்லேகம பிரதேச வைத்தியசாலையை பாதுகாக்க கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்!





மாத்தளை, லக்கல பல்லேகம பிரதேச வைத்தியசாலையைபாதுகாக்குமாறுகோரி பொதுமக்கள் ஆர்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை முன் இடம்பெற்ற இந்த ஆர்பாட்டத்தில் அவர்கள் தெரிவித்தவை வருமாறு -

குறிப்பிட்ட சில பௌதீக வளங்கள் காணப்பட்ட போதும் ஒரு சில உயர் மட்ட அழுத்தம் காரணமாக அவற்றை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கடந்த கொவிட் தொற்று காலத்தில் விசேட வார்ட்கள் அமைக்கப்பட்டு சில விசேட உபகரணங்களும் வழங்கப்பட்டன எனவும் விசேட வைத்திய அதிகாரிகள் இல்லாத காரணத்தால் அவற்றைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 3 மணித்தியாலங்கள் நீடித்த இந்த ஆர்பாட்டத்தின் பின் வைத்திய சாலை அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சை அடுத்து ஆர்ப்பாட்டம் தற்காபலிகமாகக் கைவிடப்பட்டதாகத் தெரிவித்தனர்.








## 'மொரட்டுவே குடு ரெஜினா' அதிரடிப்படையினரால் கைது

வெளிநாடுஒன்றிலிருந்து இரத்மலானை, கல்கிஸை, மொரட்டுவை பிரதேசங்களுக்குப் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடும் இரத்மலானைதேவிந்தவின் போதைப்பொருள் கடத்தல் குழுவின் முக்கிய புள்ளியாகக் கருதப்படும் பெண் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் - மொரட்டுவே குடு ரெஜினா - என பிரபலமாக அறியப்படுபவர் எனபொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொரட்டுவெல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே 49 வயதுடைய இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 5.25 கிராம் ஹெரோயினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## ஹிக்கடுவ இரட்டை கொலை சந்தேகத்தில் பெண் கைது!

காலி, ஹிக்கடுவ பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பெண்ணொருவர் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஹிக்கடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திராணகம பகுதியில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த இருவர் மீது மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி - 56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுவிட்டுதப்பிச்சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் ஹிக்கடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்படி, குறித்த துப்பாக்கிசூட்டினை மேற்கொள்ள 20லட்சம்ரூபாபணம்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகமேல் மாகாண தெற்கு குற்றத் தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள களுமுனி ரவிந்து சங்கத சில்வா எனும் பூஸ்ஸ மூனாவிடம் விசாரணைகளை மேற்கொண்டிருந்த போது தெரியவந்துள்ளது.

அதற்கமைவாக, துப்பாக்கிச்சூடு மேற்கொள்வதற்காக மோட்டார் சைக்கிள், ஓட்டோ, ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் 20லட்சம்ரூபாபணம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதோடு துப்பாக்கி சூடு மேற்கொள்ள திட்டமிட்டமை மற்றும் அதற்கு உதவியமை தொடர்பில் குறித்த பெண் ஹிக்கடுவ, களுப்பே பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 31 வயதுடைய நலாகஸ்தெனிய, ஹிக்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சந்தேக நபர் காலி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஹிக்கடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை மாணவிகளிடம் தவறாக நடந்தவர் கைது

அத்திமலை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் நான்கு மாணவிகளிடம் தனது நிர்வாணத்தைக் வெளிப்படுத்திய குற்றச் சாட்டில் 32 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அத்திமலை பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவரின் கணவர் எனத் தெரிய வருவதாகக் கூறப்படுகிறது.

நான்கு மாணவிகளை பாலியல் ரீதியில் தொந்தரவு செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார்.

சந்தேக நபரிடம் அத்திமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கியுடன் இளைஞன் ஹிக்கடுவவில் கைதானார்

ஹிக்கடுவ, பபகொஸ்ஸ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் ரத்கம முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மெட்டியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## இரு வாகனங்கள் மோதி சாவகச்சேரியில் விபத்து

### உயிராபத்து இல்லை

தென்மராட்சி, மார்ச் 21

சாவகச்சேரி அரசடிப் பகுதியில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் வாகனங்கள் கடும் சேதத்திற்குள்ளாகின. உயிர் ஆபத்து ஏதும் இடம்பெறவில்லை. யாழ். சாவகச்சேரி ஏ9 வீதி அரசடிச் சந்தியில் கப் ரக வாகனமும், டிப்பர் வாகனமும் நேருக்குநேர் மோதி இந்த விபத்து நடந்தது.

சம்பவம் இன்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கி பயணித்த டிப்பர், கொடிகாமத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த கப் ரக வாகனத்தை நேருக்கு நேர் மோதியது.

டிப்பர் சாரதி வாகனத்தைக் கைவிட்டுத் தப்பியோடிவிட்டார். அவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் எல்லைக் கிராமங்களில் சத்தமில்லாமல் பௌத்த மயமாக்கல்!

## நிலைமைகளைப் பார்வையிட்டார் ரவிகரன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் சத்தமில்லாமல் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மணலாற்றின் கற்தூண், அக்கரைவெளி, வண்ணாமடு, மணற்கேணி ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு சத்தமில்லாமல் பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என அந்தப் பகுதித் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இது தொடர்பில் அந்தப் பகுதி தமிழ் மக்கள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, அவர் கடந்த திங்கட்கிழமை குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்களின் பூர்வீக மணலாற்றின் கற்தூண் பகுதியை மகாப்பிட்டிய என்னும் பெயரிலும், வண்ணாமடு பகுதியை வண்ணாமடுவ என்னும் பெயரிலும், அக்கரைவெளி பகுதியை அக்கரவெலிய என்னும் பெயரிலும் பௌத்த பிரதேசமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல் மணற்கேணிப் பகுதியையும் அவ்வாறே பௌத்த பிரதேசமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1984 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் குறித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்பு கற்தூண் பகுதியில் வைரவர் ஆலயம் இருந்ததாகவும், அக்கரைவெளியில் முனியப்பர் ஆலயமொன்று இருந்ததாகவும், அவ்வாறு இருந்த கோவில்களை உடைத்தழித்து தற்போது அந்த இடங்களை பௌத்த பகுதிகளாக மாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெறுகின்றன எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் மணற்கேணிப் பகுதியில் இருந்த சைவ வழிபாட்டு அடையாளங்கள் உடைக்கப்பட்டு அங்கும் பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை அக்கரைவெளியில் 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருந்ததாகவும், மாட்டுப்பண்ணைகள், விவசாய நிலங்கள் என தமிழ் மக்கள் சிறப்பாக வாழ்ந்த இடங்களையே பௌத்தமயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தமிழ்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்போது அக்கரைவெளிப் பகுதியில் கொக்கிளாய் பகுதியிலுள்ள தமிழ் மக்களும், கற்தூண் பகுதியில் கொக்குத்தொடுவாய் பகுதித் தமிழ்மக்களும், மணற்கேணி மற்றும் வண்ணாமடுப் பகுதிகளில் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணித் தமிழ் மக்களும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக அந்தப் பகுதிகளுக்கு பௌத்த தேரர்கள் உள்ளிட்ட குழுவினர் அதிகளவில் வந்து செல்கின்றனர் எனவும், பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர் - என்றார்.

பகுதிகளிலிருந்து தமிழ் மக்களை அப்புறப்படுத்தவே இவ்வாறான பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அந்தப் பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு ஏற்கனவே தமிழர்களின் பூர்வீக மணலாற்றுப் பகுதியின் முக்கிய இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயாவாக மாற்றப்பட்டுள்ளதுடன், தமது நீர்ப்பாசனக் குளங்களும் அதன் கீழான வயல் நிலங்களும் அபகரிக்கப்பட்டதைப் போன்று, அவற்றை அண்டிய மானாவாரி விவசாய நிலங்களையும் ஆக்கிரமிப்பதற்கான அபாயம் இந்த பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் மூலம் ஏற்பட்டுள்ளதாகத் தமிழ்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# கைத்தொழிற் கல்வி, பயிற்சி துறையை பலப்படுத்தக் கொரியாவுடன் ஒப்பந்தம்

கைத்தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையை பலப்படுத்துவதற்காக கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கும் இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கிவரும் நியாகம தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தை மேம்படுத்துதல் மற்றும் இயலளவு விருத்திக்காக 2.15 பில்லியன் கொரிய வொன்களை நன்கொடையாக வழங்குவதற்கு கொரிய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சின் கீழ் இயங்கிவரும் கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

உத்தேச கருத்திட்டம் இவ்வாண்டு தொடக்கம் இரண்டு வருடங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக கொரியாவின் மனிதவள அபிவிருத்தி சேவை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

உத்தேச ஒப்பந்த வரைவுக்காக சட்டமா அதிபரின் ஒப்புதல், வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சை என்ற வர்த்தமானி தோற்கடிப்பு!

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சை எழுதவேண்டும் என்ற வரத்தமானி அறிவிப்பு ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவுடன் சபையில் தோற்கடிக்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற வாக்களிப்பில் வர்த்தமானிக்கு ஆதரவாக ஒரு வாக்கும் எதிராக 113 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

பிரதான நடவடிக்கைகள் இடம்பெற்ற பின்னர் பிரேரணை முன்னறிவித்தல், திணைப்பணிகளை சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த முன்வைத்து குறிப்பிடுகையில் -

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், சட்டக்கல்வி பேரவை கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள், (276ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விபேரவைக்கட்டளைச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விபேரவையால் ஆக்கப்பட்டு, 2020 டிசெம்பர் 30 ஆம் திகதி 2208/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.10ஆம் திகதி சமர்க் கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக. என்ற பிரேரணையை சபைக்கு சமர்ப்பித்தபோது, அதற்கு சபை இணக்கமா என சபாநாயகர் கேட்டார்.

அதற்கு சபையில் இருந்த ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து சபாநாயகர் குறித்த வர்த்தமானி அறிவிப்புத் தொடர்பில் வாக்களிப்புக்கு செல்லுமாறு உத்தரவிட்டார். வாக்களிப்புக்காக கோரம் மணி ஒலிக்கவிடப்பட்டது. தொடர்ந்து இலத்திரணியல் முறையில் இடம்பெற்ற வாக்களிப்பில் வர்த்தமானி அறிவிப்பை முன்னுக்கு கொண்டுசெல்ல எதிரப்பு தெரிவித்து 113 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஆதரவு தெரிவித்து ஒரு வாக்கு அளிக்கப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர் சந்திமவீரக்கொடி மாத்திரம் வர்த்தமானிக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.

அதன் பிரகாரம் சட்டக் கல்விபேரவை கட்டளைச்சட்டத்தின் கீழ் விதிகள், (276ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்வி பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்வி பேரவையினால் ஆக்கப்பட்டு, 2020 டிசெம்பர் 30ஆம் திகதி 2208/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை, 112 மேலதிக வாக்குகளால் நிராகரிக்கப்பட்டதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2023இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**


பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 07 செவ்வாய்க்கிழமை 21.03.2023 கதிர் 04


## ருஹுணு பல்கலை மோதல்: இரண்டு மாணவர்கள் கைது

ருஹுணு பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற மோதலில் ஈடுபட்ட இரண்டு மாணவர்கள் இன்று காலை கம்புருப்பிட்டிய பொலிஸில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி 26 இரவு விடுதிக்காப்பாளருக்கும் கம்புருபிட்டிய தொழில்நுட்பப் பீட மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக விடுதிக் காப்பாளர் மாணவர்களால் தாக்கப்பட்டார்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த இரண்டு மாணவர்களும் 2



## நாளை உலக நீர் தின விழா

### அமைச்சர் ஜீவன் தலைமை

உலக நீர் தின விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு இரத்மலானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு மையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ளது.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் நிராந்த ரணதுங்கவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நிகழ்வில், யூ.என்.டி.பி. இலங்கை வதிவிடப் பிரதிநிதி அஸுசா குபோட்டா சிறப்புரையாற்றவுள்ளார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஓவியம், கட்டுரை, மேடை நாடகம் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் இதன்போது வழங்கப்படவுள்ளன.

அத்துடன், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் 25 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றிய ஊழியர்களுக்கு தங்க நாணயமும், கடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு 2

## நாம் இனி வங்குரோத்தடைந்த நாடல்ல

# ஐ.எம்.எப். உடன்படிக்கை நாளை நாடாளுமன்றில்

### விசேட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவால் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில், கடனை மறுசீரமைக்கும் வலிமை கொண்ட நாடு என்ற சர்வதேச அங்கீகாரத்தை இலங்கை பெற்றுள்ளது என்றும், அதன்படி இலங்கை வங்குரோத்தான நாடல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே, இனிமேல் வழமையான கொடுக்கல் - வாங்கல்களை ஆரம்பிக்கும் திறன் எமக்குக் கிடைத்துள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று ஆற்றிய விசேட உரையிலேயே இதனைக் குறிப்பிட்டார். 2

## தேர்தலை நடத்தும் நிபந்தனையை நாணய நிதியம் வைக்கவேயில்லை

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் பந்துல

(தன்வீன்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துமாறு சர்வதேச நாணய நிதியத்தினால் எவ்வித மான நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கு வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டில் தேர்தலை நடத்துமாறு எந்த வொரு நிபந்தனையும் முன்வைக்கப்படவில்லை. அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்தை வழங்கு வதில்கூட நெருக்கடி ஏற்பட்ட நிலைமையிலேயே இவ்வாறான கடன் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய செலவுகளை இயன்றவரை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையே இந்த ஆட்சி நடைமுறைப்படுத்தும். மாறாக தற்போது காணப்படும் சிக்கல்களை மேலும் அதிகரிக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட மாட்டாது. நாம் அனைவரும் சகல பொது நிறுவனங்களினதும் செலவுகளைக் கட்டுப்படுத்தி சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயற்படவேண்டும். தேர்தல் குறித்த தீர்மானம் தேர்தல் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் – என்றார்.

## ஐ.எம்.எப். விதித்த நிபந்தனை யாது?

### சபையில் அரசிடம் சஜித் கேள்வி



சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகளை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்த வேண்டும் எனவும், தேர்தலை ஒத்தி வைப்பதன் மூலம் மக்கள் விரோத அரசு கூறும் செய்தி பாரதூரமானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அண்மைக்காலமாக போராட்டங்கள் மீதான தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட கண்ணீர்ப்புகையின் தரம் மற்றும் அவற்றின் உள்ளார்ந்த தன்மை குறித்து உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய நாடாளுமன்ற அமர்வில் வலியுறுத்தினார்.

நிலையியல் கட்டளை 27(2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய சபை அமர்வில் எழுப்பிய கேள்விகள் வருமாறு:

நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலையைக் காரணமாகக் கொண்டு பின்வரும் விடயங்களைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளாகக் கருதி அரசிடம் இருந்து குறிப்பிட்ட பதில்களையும், விளக்கங்களையும் எதிர்பார்க்கின்றேன்.

01. சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசு கையொப்பமிட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாது?

02. குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம், மறுசீரமைப்புக்கு ஆளாகும் 2



## பசறை வாகன விபத்தில் மகன் பலி; தந்தை காயம்

வாகன விபத்தில் 19 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பசறை – மொனராகலை பிரதான வீதியில் இன்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியில் தொழும்புவத்தை 3 ஆம் கட்டைப்பகுதியில் தந்தையும், மகனும் மோட்டார் சைக்களில் பயணித்த வேளை சிறிய பட்டா ரக வாகனம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த 19 வயதுடைய மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய தந்தை பலத்த காயங்களுடன் பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இறந்த நபரின் சடலம் பசறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



## குடத்தனையில் கோர விபத்து தந்தை சாவு; மகள் படுகாயம்

யாழ்., வடமராட்சி கிழக்கு - குடத்தனையில் இன்று இடம்பெற்ற கோர விபத்தில் தந்தை பலியாகியுள்ளதுடன் மகள் படுகாயமடைந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியைச் சேர்ந்த சின்னையா கணேசசிங்கம் (வயது 44) என்பரே உயிரிழந்துள்ளார். அவருடைய 21 வயது மகள் படுகாயமடைந்தார்.

அம்பன் பகுதியில் 2

## நீர்வீழ்ச்சியில் நீராடிய 4 இளைஞர்கள் மாயம்

### அனைவரும் கிழக்கைச் சேர்ந்தோர்



வெல்லவாய - எல்லாவல நீர்வீழ்ச்சியில் நீராடச்சென்ற 4 இளைஞர்கள் இன்று காலை நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர்.

10 பேர் கொண்ட இளைஞர்கள் குழு ஒன்று இங்கு நீராடச் சென்றது எனவும், அவர்களில் 4 பேர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கல்முனை, காத்தான்குடி மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களே காணாமல்போயுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல்போன இளைஞர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

## இறக்குமதிகளுக்கான தடை படிப்படியாகவே நீக்கப்படும்

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்துள்ளபோதும் இறக்குமதிகளுக்கான தடையை முற்றாக நீக்க முடியாது என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு இன்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டவுடனேயே இறக்குமதிகளுக்கான அனைத்துத் தடைகளையும் நீக்கிவிட முடியாது.

இப்பொழுது தடம்புரண்டுள்ள பொருளாதாரத்தினை சரியான வழிக்குக் கொண்டு வருவதற்கான முதற்படியில் காலடி வைத்துள்ளோம். அதற்கமைவாக எதிர்வரும் காலத்தில் எமது பயணங்களை மிகவும் அவதானத்துடன் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போதைய நிலையில் அந்நிய செலாவணி கையிருப்பு போதுமான 2

### தேர்தல் நிதியை தொடர்ந்து தடுத்த

## திறைசேரி செயலாளர் மீது உயர் நீதிமன்றில் வழக்கு

உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ்சுமத்தி, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தினால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியை முடக்குவதைத் தடுத்து பிறப்பிக்கப்பட்ட நீதிமன்றத்தின் தடை உத்தரவை நிறைவேற்ற நிதியமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

முன்னதாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை விடுவிக்குமாறு மார்ச் மூன்றாம் திகதி உயர் நீதிமன்றம் திறைசேரியின் செயலாளருக்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது

## மோ. சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் இறப்பு



அக்கரையான் போலீஸ் பிரிவுக்கு உட்பட்ட வன்னேரிகுளம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் உயிரிழந்தார். வசந்தரூபன் சுமன் (வயது 34) என்ற திருமணமாகி 4 மாதங்களே ஆன இளைஞரே உயிரிழந்தார்.

கிளிநொச்சியில் இருந்து வன்னேரிக்குளம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் வன்னேரியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மோட்டார் 2

## நாணய நிதிய கடனுக்கான 5 அம்ச திட்டங்கள் என்ன?

### விளக்குகின்றார் இலங்கைத் தலைவர்

இலங்கைக்கு வழங்கப்பட்ட நீடித்த கடன் வசதியானது வலுவான கொள்கைகள் உட்பட ஐந்து விடயங்களை கொண்டமைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான 2

## ஐ.எம்.எப் விதித்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் யாது?

03. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் என்ன? அந்த ஒப்பந்தத்தை இந்த வாரம் இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்க முடியுமா?

04. மக்கள் ஆணை இன்மையால் தேர்தலை ஒத்திவைக்கும் அரசு, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய தரப்புகளுடன் மேற்கொள்ளும் உடன்படிக்கைகள் மற்றும் தீர்மானங்களுக்கு மக்களின் ஆணையைப் பெறுவது எவ்வாறு?

05. சரியான நேரத்தில் தேர்தலை நடத்தாத ஒரு நாட்டை ஜனநாயக நாடு என எங்கனம் அழைக்க முடியும்?

06. இந்த ஆண்டு தேர்தல் எதனையும் நடத்த அரசு திட்டமிடவில்லையா?

07. அவ்வாறு இல்லாவிட்டால், இரண்டாவது தடவையாகவும் திகதி குறிக்கப்பட்ட உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை நிதி அமைச்சு தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்காமைக் கான காரணங்கள் யாது?

08. அரச அச்சகரால் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவால் கோரப்பட்ட தொகை எவ்வளவு?

09. அவ்வாறு கோரப்பட்ட தொகையில் எவ்வளவு தொகை இப்போது வழங்கப்பட்டுள்ளது? இன்னும் எவ்வளவு தொகை அரச அச்சகத்துக்குக் கொடுக்க வேண்டும்? அந்தத் தொகையை எப்போது மட்டில் கொடுக்க முடியுமாக இருக்கும்?

10. புதிய வருமான வரிச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் கடந்த இரண்டு மாதங்களில் அரசுக்குக் கிடைத்துள்ள வருவாய் எவ்வளவு?

11. கடந்த காலத்தில் தொழில் வல்லுநர்களால் புதிய வருமான வரிச் சட்டத்தில் என்ன திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன? அந்தத் திருத்தங்களைச் செய்வதற்கு அரசு சம்மதிக்கின்றதா?

12. புதிய வருமான வரிச் சட்டத்தில் அரசு திருத்தம் செய்வதை எதிர்பார்ப்பதாக இருந்தால், அது எந்த முறையில் மேற்கொள்ளப்படும் என்பதை விளக்குமா?

13. அண்மையில் கொழும்பு பல்கலைக் கழக வளாகத்துக்குள் பொலிஸார் நுழைந்து, மாணவர்களைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கல்வி அமைச்சரால் கோரப்பட்ட அறிக்கை மற்றும் அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் யாது?

14. கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கிய இராணுவத் தளபதி அல்லது பொலிஸ்மா அதிபருக்குத் தெரியாத படைகள் பயன்படுத்தும் சீருடைக்கு இணையான சீருடை அணிந்த தடி ஏந்தி இருந்தவர்கள் யார்?

15. குறித்த அறியப்படாத குழுவுக்குக் கட்டளை பிறப்பித்தது யார்? இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றம் யாது?

16. கடந்த காலங்களில் போராட்டங்களைக் கலைக்க அரசு பயன்படுத்திய கண்ணீர்ப்புகைக் குண்டுகளால் பலர் உயிரிழந்தனர். இரசாயன விக் கலவையா இதற்குக் காரணம்? அல்லது காலாவதியான கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தியமையா இதற்குக் காரணம்?

17. 2022 மே 9 ஆம் திகதி அன்று அலரி மாளிகை அருகில், 2022 ஜூலை 13 ஆம் திகதி அன்று பிரதமர் அலுவலகம் அருகில், 2023 பெப்ரவரி 26 ஆம் திகதி அன்று லிப்டன் சுற்றுவட்டத்துக்கு அருகில் மற்றும் 2023 மார்ச் 07 ஆம் திகதி அன்று கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களைக் கலைக்கப் பயன்படுத்தப்பட்ட CS Shells மற்றும் CS Grenade கண்ணீர்ப்புகைக் குண்டுகளின் உற்பத்தி திகதிகள் மற்றும் காலாவதி திகதிகள் யாது?

18. குறித்த போராட்டங்களில் பயன்படுத்தப்பட்ட CS Shells மற்றும் CS Grena-ள கண்ணீர்ப்புகைக் குண்டுகளின் தரத்தை உறுதி செய்ய முறையான ஆய்வகப் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதா? குறித்த பரிசோதனை அறிக்கையை இந்தச் சபையில் சமர்ப்பிக்க முடியுமா? அவ்வாறு சமர்ப்பிக்க முடியாது என்றால் ஏன் முடியாது?

19. மேலும் 15,000 CS Shells மற்றும் CS Grenade கண்ணீர்ப்புகைக் குண்டுகளைக் கொள்வனவு செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதா? இதற்காக மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு?

– மேற்படி கேள்விகளை எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர்.

## ருஹுணு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராக்குதலுடன் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்த பீடத்தில் இரண்டாம் ஆண்டில் ல்வி கற்கும் மாணவர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் கொட்டவில நீதவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்

## நாளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.டபிள்யூ.எஸ். சமர திவாகர உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் வசந்தா இலங்ஹசிங்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர்.

## ஐ.எம்.எவ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரித்துக்கொள்வதுடன், அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் மற்றும் சுற்றுலாவுக்குத் தேவையான பொருட்கள் மீதான இறக்குமதித் தடைகளை அரசு படிப்படியாக நீக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கைக்கு ஆதரவளித்த அனைத்து நாடுகளுக்கும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் இரு தலைவர்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இனிமேல் இந்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அது தொடர்பான உடன்படிக்கை நாளை புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் – என்றார்.

## இறக்குமதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகரிக்கவில்லை. அந்நிய செலாவணி கையிருப்பு முகாமைத்துவம் உள்ளிட்டவை மத்திய வங்கியினால் படிப்படியாக முன்னெடுக்கப்படும். அதற்கமையவே இறக்குமதி கட்டுப்பாடுகள், தளர்வுகள் குறித்த தீர்மானங்களும் எடுக்கப்படும்.

இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள துறைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கான இறக்குமதித் தடைகளை நீக்குவதற்கு முன்னுரிமையளிக்குமாறு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் பின்னர் ஒவ்வொரு காரணிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி படிப்படியாக இறக்குமதிகளுக்கான தடைகள் மீளாய்வின் அடிப்படையில் நீக்கப்படும் – என்றார்.

## நாணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிரேஷ்ட திட்டத் தலைவர் பீற்றர் ப்ரூவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இன்று மெய்நிகர் வழியில் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மோசமான வகையில் எடுத்த தீர்மானங்களால் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது.

இதனால் ஏழைகள், நடுத்தரவர்க்கத்தினர் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தார்கள்.

இந்த நிலைமைகளை அவதானித்தே தற்போது நீடிக்கப்பட்ட கடன் வசதி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் வசதியானது, வலுவான கொள்கைகள் மற்றும் ஐந்து விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

- வருமான அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு, சமூகப் பாதுகாப்பு, நிதி நிறுவன சீர்திருத்தம் மற்றும் செலவு அடிப்படையிலான இருசக்தி நிறுவனம் என்பன அதன் முதலாவது விடயமாகும். ஆகவே இதனை அத்தியாவசிய பொருட்களுக்காக செலவிட முடியும்.
- கடன் மறுசீரமைப்பு மூலம் கடன் நிலைத்தன்மையை உறுதி செய்வது இரண்டாவது விடயமாகும்.
- மாற்று மூலோபாயங்கள் மூலமாக அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரித்து விலைகளை உறுதிப்படுத்தல் மூன்றாவது விடயமாகும். இதன் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான அழுத்தம் குறைக்கப்பட்டு முதலீடுகளுக்கான வாய்ப்பு உருவாகும். அத்துடன் அத்தியாவசிய இறக்குமதிகளையும் மேற்கொள்ள முடியும்.
- நிதித்துறையில் திடமான நிலையை உறுதி செய்வதற்கான கொள்கைகள் நான்காவது விடயமாகும் இதன் மூலமாக பொருளாதார உறுதிப்பாட்டை, நிதித்துறை கொள்கைகளை உறுதி செய்ய முடியும்.
- ஊழலை தடுப்பதற்கு உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வது ஐந்தாவது விடயமாகும். இந்த சீர்திருத்தம் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முக்கிய பகுதியாகும்.

இலங்கை ஐக்கிய நாடுகள் சபையுடன் ஊழல் எதிர்ப்பு சாசனத்தில் கையொப்பமிட்டுள்ளது என்பதையும் இங்கு கவத்தில் கொள்ள வேண்டும் – என்றார்.

## மோ.சைக்கிள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சைக்கிள்களைச் செலுத்திய இருவருமே படுகாயமடைந்தனர்.

இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கிருந்து ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். மற்றைய நபர் கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார். சிகிச்சை பயனின்றி திங்கட்கிழமை மாலை அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கராயன் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## குடத்தனையில்.....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மணல் ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை நோக்கி வந்த லொறியும், பருத்தித்துறையில் இருந்து மருதங்கேணி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து நிகழ்ந்தது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவருடன் பயணித்த அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பருத்தித்துறைப் பொலிஸார், மண் ஏற்றி வந்த லொறியின் சாரதியைக் கைது செய்துள்ளனர்.



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC SampathBank COMMERCIAL BANK HNB

# பல்கலை கல்விச் செயற்பாடு கேள்விக்குறியாகியுள்ளது

## லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறுகிறார்



பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கும் அரசியல் கட்சிகள், குழுக்களின் போராட்டங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக பல்கலைக்கழகங்களின் கல்வி செயற்பாடுகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

மாத்தறை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில் – பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்த நாடு இன்று ஓப்பீட்டளவில் ஸ்திரமடைந்துள்ளது. இருப்பினும் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் மீண்டெழும் நாடு பின்னோக்கி கொண்டு செல்லும் நிலைக்கு தள்ளப்படுகிறது. அரசியல் கட்சிகளுக்கு பல்வேறு நோக்கங்கள் இருக்கலாம். இருப்பினும் நாட்டின் பொருளாதாரத்தை பயன்படுத்தி அதனை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்க கூடாது.

அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்காக வெவ்வேறு முயற்சி களை மேற்கொள்கின்றன.

நாட்டின் மீதான பற்றுகாரணமாக இவ்வாறு செயற்படுமாயின் நாம் அதனை வரவேற்கிறோம்.

மேலும் நாட்டை எவ் வாறு மீட்டெடுப்பது? எதிர்காலத்தில் எவ்வாறு வேலைத்திட்டங்களை மேற்கொள்வது? என்பது தொடர்பில் அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. இதுவே தற்போதைய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முன்வருவதை விட நாட்டைக் கட்டியெழுப்பும் முறையை முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

இன்றளவில் வெளிநாடுகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்படும் நிதி சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தை விட அதிகமாகும். நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவதற்கு அனுமதியளிக்கப்படாமையால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் மேல்மட்டத்தில் இருப்பவர்கள் தங்களுடைய பிள்ளைகளை வெளிநாட்டுபட்டப்படிப்புகளுக்காக அனுப்பும் போது வறுமைக் கோட்டின் கீழ் காணப்படும் குடும்பங்களின் நிலை மிகவும் கவலைக்குரிய தாகியுள்ளது.

இவ்வாறானதொரு கலாசாரத்தை மாற்ற வேண்டும். இதற்கான மாற்று வழிகளை உருவாக்க வேண்டும். இதன் பொருட்டு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு குறுகிய கால பகுதிக்கு சில தியாகங்களையும், விட்டுக்கொடுப்புகளையும் செய்ய வேண்டும். – என்றார்.

# மஹிந்த சிறிவர்தனவிற்கு 7 நாள்கள் அவகாசமாம்

## எச்சரிக்கிறார் பீரிஸ்



உள்ளூராட்சித்தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை 7 நாள்களுக்குள் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்க வேண்டும் என ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வழங்காவிட்டால் அவருக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் உயர் நீதிமன்றத்தை நாடும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவின் படி தேர்தல்கள் ஆணைக் குகுழுவுக்கு பணத்தைச் செலுத்தாவிடின், நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதி அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க தாம் கோருவோம் என்றும் கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இந்த நிலை தொடர்பாக அடுத்த வாரம் முதல் சர்வதேச சமூகத்திற்கும் அறிவிக்கப் படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் தேர்தல் தொடர்பில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# விஜேதாஸ, அலிசப்ரி இன்று தென் ஆபிரிக்கா பயணம்

நாட்டு மக்கள் மத்தியில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கில் ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள உண்மைகளைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளை எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பாகத் தென்னாபிரிக அரசாங்கத்திடமிருந்து அனுபவப்பகிர்வைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்தக் காரணியை இலக்காகக் கொண்டு நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு இன்று (செவ்வாய்கிழமை) உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு தென்ஆபிரிக்கா செல்லவுள்ளது.

இலங்கைக்கான தென் ஆபிரிக உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ.ஸ்சல்க் அண்மையில் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடிய போது, தென் ஆபிரிகாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உண்மைகளைக்கண்டறிவதற்கான ஆணைக்குழு செயற்படும் விதம் தொடர்பில் அனுபவப் பகிர்வைப் பெற்றுக் கொள்வதற்காக விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

குழப்பான சூழ்நிலையின் பின்னர் உலக நாடுகளுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்து–வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களில் வெற்றிகரமான செயற்பாடுகளை முன்னெடுத்த ஆணைக் குழுவாக தென் ஆபிரிக்காவின் உண்மைகளைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு காணப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் ரணிலுக்கு கிடையாது

## உதய கம்மன்பில கூறுகிறார்



பதவி காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதி பதி தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கிடையாது. ஏனெனில் அவர் மக்களால் தெரிவு செய்–யப்பட்ட தலைவர் அல்லர், பொதுத்தேர்தலில் இழந்த மக்கள் செல்வாக்கை ஜனாதிபதிதேர்தல் ஊடாக ஒருபோதும் பெற முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் கூட்டணி காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

2023 ஆம் ஆண்டு நவம்பர் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி குறிப்பிட்டுள்ளார். அரசமைப்பு தொடர்பாக அறியாமல் இவ்வாறான கருத்துக்களைக் குறிப்பிட்டு மக்களைத் தவறாகவழிநடத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசமைப்பின் 31(3 அ) மற்றும் (ஆ) உறுப்புரைக்கு அமைய ஜனாதிபதி தனது 4 வருட பதவி காலத்தை முழுமைப்படுத்துவதற்கு முன்னர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுபவராக இருந்தால் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியும். அவ்வாறாயின் எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்க முடியும்.

இருப்பினும் 31(3) இ உறுப்புரையில் மக்களால் தெரிவு செய்யப்படாத இடைக்கால ஜனாதிபதியால் நான்கு வருட பதவி காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்க முடியாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே முன்னாள் ஜனாதிபதிக்கு அந்த அதிகாரம் இருந்தது, ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அந்த அதிகாரம் இல்லை. ஏனெனில் அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்லர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க பாரிய தடையாக உள்ளார். 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் இழந்த மக்கள் செல்வாக்கை ஜனாதிபதித் தேர்தல் ஊடாக பெற்றுக்கொள்ள ஜனாதிபதி முயற்சிக்கிறார். நாட்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாகப் புறக்கணித்துள்ளார்கள், இனியொருபோதும் ஐக்கிய தேசியக்கட்சியால் எழுச்சிபெற முடியாது. – என்றார்.

# இரண்டு பிரதான நிறுவனங்களும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலாம்!

## கூறுகிறார் பெரமுன செயலர் சாகர

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்துக்காக ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு பிரதான நிறுவனங்களும் நேற்று முதல் மறைமுகமாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஜனநாயகத்தை மதிக்கும் எவராலும் இந்த நிலைமை ஏற்றுக்கொள்ள முடியாதது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மக்களின் அன்றாட விவகாரங்கள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய–வற்றில் தலையிடும் அதிகாரத்தின் மிகச்சிறிய அலகு உள்ளூராட்சி மன்றம் என்றும் மற்றயது மாகாண சபை என்றும் குறிப்பிட்டார்.

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை கட்டுப்படுத்துவதற்காக உள்–ளூராட்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் நேற்று முதல் இந்நிலைமை



மாறியுள்ளதாக தெரிவித்தார்.

# உள்ளூராட்சி தேர்தலைப் பிற்போடுமாறு ஜனாதிபதியை நாம் வற்புறுத்தவில்லை

## அடித்துக் கூறுகின்றார் சாகர

உள்ளூராட்சி மன்றத் தேர் தலை பிற்போடுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் வலியுறுத்தவில்லை. தேர்தலை விரைவாக நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

உள்ளூராட்சி மன்றங்கள் அரச அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு–னவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவி–யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற நிர்வாகம் மாநகர சபை ஆணையாளர்களிடமும், பிரதேச சபை செயலாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு–னவின் உறுப்பினர்கள் தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்ற நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகள் அல்லாத தரப்பினரால் முன்னெடுக்கப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது. உள்ளூராட்சிமன்றத்தேர்தலை பிற்போடுமாறு ஜனாதிபதியிடம் பொதுஜன பெரமுன ஒரு போதும் வலியுறுத்தவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெகுவிரைவாக நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயாராக உள்ளோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய் என்பதை நாட்டுமக்கள் அறிந்து கொண்டுள்ளார்கள்.

தேர்தல் இடம்பெற்றால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெறும். தேர்தலைப் பிற்போடும் நோக்கம் எமக்குக்கிடையாது. யாருக்கு ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள். – என்றார்.

# நாணய நிதிய முடிவுக்கு அமெரிக்கா வரவேற்பு



இலங்கைக்கான நிதி உதவிக்கு சர்வதேச நாணய நிதியம் அங்கீகாரம் வழங்கியுள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

மிகப்பெரும் செய்தி பொருளாதார மீட்சி நோக்கிய பயணத்தில் முக்கியமான நடவடிக்கை என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் சீர்திருத்தங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும், சர்வதேச நாணயநிதியத்தின் திட்டமும் பொருளாதாரமும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்யவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி மற்றும் வெளிப்படை தன்மை போன்ற விடயங்களுக்கு தீர்வைக் காண்பதற்கு அவசியமான கட்டமைப்பு மாற்றங்கள் நிரந்தர சீர்திருத்தங்களின் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அமெரிக்க தூதுவர் இலங்கையின் அனைத்து பிரஜைகளும் பொருளாதார வளர்ச்சி காண்பதற்கு இது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

# மாரவில நீதிவான் நீதிமன்றில் 23 லட்சம் ரூபா பணம் மாயம்

மாரவில நீதிவான் நீதிமன்றில் வழக்குப் பொருள்களாகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 23 லட்சம் ரூபா பணம் காணாமல் போயுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீதிமன்றத்தை மூடுவதற்கு முன்னர் மாரவில நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் பெட்டகத்தைச் சோதித்த போது, பெட்டகத்தில் காணப்பட்ட சுமார் 23 லட்சம் ரூபா பணம் காணாமல் போயிருந்ததை அவதானித்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவம் தொடர்பில் மாரவில தலைமையக பொலிஸில் பதிவாளர் முறைப்பாடு செய்துள்ளார். இதன் பாதுகாப்புக்கு பெண் உத்தியோகத்தர் ஒருவரே பொறுப் பாக இருப்பதாக பதிவாளர் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எனது வீடு எரிக்கப்பட்டமை விசாரணைகளில் தாமதம்

## அமைச்சர் பிரசன்ன வருத்தம்

கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மையின் போது உடுகம்பலையில் உள்ள தனது வீடு எரிக்கப்பட்டமை தொடர்பான முறைப்பாட்டை விசாரணை செய்வதில் தாமதம் ஏற்பட்டமை தொடர்பில் கவலை தெரிவித்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விரைவில் ஆஜராகுவதற்கான திகதி மற்றும் நேரத்தை வழங்குமாறு நான்கு தடவைகள் எழுத்து மூலம் கோரியுள்ளதாக அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கான சந்தர்ப்பத்தை விரைவில் வழங்குமாறும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனது கடிதத்தில் மேலும் கோரியுள்ளார்.

# புதிய நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தல்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு அறிவிக்கத் தொடங்கியுள்ளதாக நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

காணிகளை அபிவிருத்தி செய்தல், கட்டட நிர்மாணம் மற்றும் மாற்றியமைத்தல், இணக்கச் சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட விதிமுறைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும் என அமைச்சு கூறுகிறது.

இலங்கையில் உள்ள மொத்த உள்–ளூராட்சிகளின் எண்ணிக்கை 341 ஆகும். இதில் 29 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் இதற்குள் அடங்குகின்றன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அநியாய உயிரிழப்புக்களைத் தடுக்க என்ன பொறிமுறை

இன்று மட்டும் தேவையற்ற வகையில் பல உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. வெல்லவாய – எல்லாவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற 4 இளைஞர்கள் இன்று காலை நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் அனைவரும். சுற்றுலாச்சென்றசமயம்அவர்கள்உயிரிழந்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம், குடத்தனையில் இடம்பெற்ற விபத்தில் தந்தை உயிரிழக்க மகள் படுகாயமடைந்திருக்கிறார். பசறையில்நடந்தவிபத்தில்மகன்உயிரிழக்கதந்தைகாயமடைந்திருக்கிறார். இப்படி நாளாந்தம் விபத்துக்களிலும் வேண்டத்தகாத நிகழ்வுகளிலும் ஏற்படும் உயிரிழப்புக்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இலங்கையில் நீரில் மூழ்குவதால் வருடாந்தம் சராசரி ஆயிரத்துக்கும் அதிகமான இறப்புக்கள் நிகழ்கின்றன என்கின்றன ஆய்வுகள். இவற்றில் தமதுயிரைத் தாமே மாய்த்துக்கொள்வதற்காக நீர் நிலைகளில் குதிப்பவர்களும் அடக்கம் என்கிறபோதும் சுற்றுலா செல்கின்ற சமயங்களிலும் கடற்கரைகளில் குளிக்கச் செல்கின்ற சமயங்களிலும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவே இருக்கின்றது.

இதிலும் கடலில் மூழ்கி உயிரிழப்பவர்களிலும் பார்க்க நிலப்பகுதியில் உள்ள நீர் நிலைகளில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கின்றது. 75 சதவீதமானவர்கள் நிலப் பகுதியிலுள்ள நீர் நிலைகளில் மூழ்கியே உயிரிழக்கின்றனர்.

நீர்நிலைகளில் ஏற்படும் விபத்துக்களில் சிக்கிக் கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்களாக இருப்பதும் பெரும் பரிதாபத்துக்குரியது. அவர்களுக்கு நீச்சல் தெரியாமல் இருப்பதே அதற்கான காரணம். மிகச் சிறிய வயதிலேயே மாணவர்களுக்கு நீச்சலைக் கட்டாயமாகப் பழக்கவிடவேண்டியது அவசியம். அதன் மூலம் நீர்நிலை விபத்துக்களால் ஏற்படும் இறப்புக்களைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

களுபோவில வைத்தியசாலையில் பதிவான நீர்நிலை விபத்துக்களால் ஏற்பட்ட இறப்புக்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் அவற்றில் பெரும்பாலானவற்றைத் தவிர்த்திருக்க முடியும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் இத்தகைய இறப்புக்களைத் தடுப்பதற்கான எந்தவொரு பொறிமுறையையும் அரசு ஏற்படுத்தக் காணோம். குறைந்தபட்சம் சுற்றுலாத் தலங்களாக இருக்கும் நீர் நிலைகளிலாவது பாதுகாப்பு வளையங்களை ஏற்படுத்துவதற்குக்கூட அந்தந்த உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்தாமல் இருப்பது அவற்றின் அலட்சியத்தையும் உயிர்களை மதிக்காத போக்கையும் எடுத்துக்காட்டுகின்றது.

அதேபோன்று வீதி விபத்துக்களிலும் வருடாந்தம் 2 ஆயிரத்து 500 முதல் 3 ஆயிரம் பேர் உயிரிழக்கிறார்கள். சுமார் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் பேர் வரையில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகிறார்கள். இவற்றையும் தடுப்பதற்கான பொறிமுறைகளின் மீது ஆட்சித் தரப்புக்கள் அக்கறை காட்டுவதாக இல்லை.

சாரதிகளின் திறனை மேம்படுத்துவதற்கான இறுக்கமான கட்டுப்பாடுகள், வீதி ஒழுங்குகளைப் பேணுவதற்கான தீவிர கட்டுப்பாட்டு நெறிமுறைகள், சாரதிப் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் மீதான இறுக்கமான கண்காணிப்பு மற்றும் சராதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதில் உள்ள ஊழலைத் தடுப்பதற்கான நடவடிக்கை என்பவற்றை மேற்கொள்வதற்கான அக்கறை காட்டப்படுவதேயில்லை.

வீதி விபத்துக்கள் அதிகரிப்பு பற்றிய செய்திகள் வெளியானால் பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பில்ஒருசிலகருத்தரங்குகள்நடத்துவதோடுபொறுப்பு முடிந்துவிடுவதாக அதிகாரிகளும் நடந்துகொள்கிறார்கள்.

இந்தப் போக்குகள் காரணமாகவே வருடாந்தம் சுமார் 5 ஆயிரம் பேர் தமது உயிர்களை இழந்தும் நிரந்தர அங்கவீனர்களாக மாறியும் போகிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்தவேண்டியது அவசியம். அதற்கான பொறிமுறை தொடர்பில் அரசு சிந்தித்து விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# எரிபொருள் மற்றும் மின்சாரம் கட்டணங்களை குறைக்குக

## சம்பிக்க கோரிக்கை



டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளதால் எரிபொருள் மற்றும் மின் கட்டணங்களை கணிசமான விகிதத்தில் குறைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையும் இலங்கைபெற்றோலிய கூட்டுதாபனமும் தற்போதுபாரிய இலாபத்தைஈட்டுகின்றன என்றும் எரிபொருள் மற்றும் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான ரெண்டர் நடைமுறையில் ஊழல் இருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும், இறக்குமதிக்கானகட்டுப்பாடுகள் மற்றும் எரி பொருள் நுகர்வுகுறைக்கப்பட்டதாலும் அமெரிக்க டொலருக்கான தேவை குறைந்துள்ளது என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஆகவே வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை செலுத்த ஆரம்பித்தால் அல்லது இறக்குமதியை அனுமதித்தால் டொலரின் மதிப்பு அதிகரிக்கும் என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

# இலங்கை தனது பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான மூலோபாயம் தொடர்பில் அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும்!

## சீர்திருத்தங்களும் அவசியம் என்கிறார் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா



இலங்கைதனது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான மூலோபாயம் தொடர்பாகஅர்ப்பணிப்புடன்

இருக்கவேண்டும் என சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பணவீக்கத்தை கட்டுப் படுத்தும் தனது நடவடிக்கைகளின் நம்பகதன்மையை பேணுவதற்கு பலமுனை பணவீக்க உத்தி தொடர்பாக அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடும் பொருளாதார சமூக சவால்களை எதிர்கொண்டுள்ளது உயர் பணவீக்கத்துக்கு மந்தியில் கடும் மந்த நிலை காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ள அவர், குறைந்து போயுள்ள வெளிநாட்டு நாணயக் கையிருப்பு நீடித்து நிலைக்க முடியாதபொதுகடன்நிதித்துறைபலவீனங்கள் அதிகரித்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்தாபனங்களையும் அரச கட்டமைப்புகளையும் ஆழமான சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ள அவர், இலங்கை இந்தநெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சீர்திருத்தங்களை விரைவாகவும் உரிய நேரத்திலும் முன்னெடுப்பது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சீர்திருத்தங்களுக்கான வலுவான உரிமையை கையிலெடுப்பது முக்கியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பு நிம்மதியளிக்கின்றது என்கிறார் ஹர்ஷ



சர்வதே நாணயநிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவி தொடர்பான அறிவிப்பால்நிம்மதியடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதனை சாத்தியமாக்குவதற்கு ஜனாதிபதி வெளிப்படுத்திய அர்ப்பணிப்பு அரசியல்வேறுபாடுகளுக்கு அப்பால் பாராட்டப்படவேண்டியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் திறைசேரி செயலாளர் ஆகியோரின் தொழில்சார் திறனையும் அவர் பாராட்டியுள்ளார்.

முன்னர் பதவியில் இருந்தவர்கள் இதனைச் செய்திருந்தால் எங்கள் மக்கள் இவ்வளவுதுன்பங்களை அனுபவித்திருக்கமாட்டார்கள் எனக் குறிப்பிட்டுள்ள அவர், நாங்கள் அதிக வேதனைகளை அனுபவிக்காமல் இதிலிருந்து மீண்டிருப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பிடிவாதம் எங்களை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றது என குறிப்பிட்டுள்ள அவர் முன்னோக்கி சிந்திப்போம் கடன்மறுசீரமைப்பு என்பதுகடினமானதாகக்காணப்படும்சீர்திருத்தங்கள் அவசியமானவை எனவும் தெரிவித்துள்ளார்.

# மாத இறுதியிலிருந்து மாணவருக்கு பேச்சு ஆங்கிலம் கற்பிக்கப்படும்

## அமைச்சர் சுசில் தகவல்



ஆங்கிலமொழியின்முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அனைத்துதேசிய பாடசாலைகளிலும் 30 ஆம் திகதி முதல் தரம் ஒன்றிலிருந்து 'ஸ்போக்கன் இங்கிலீஷ்' கற்பிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

தரம் 6-9 மற்றும் 10-13 வகுப்புகளில் இருந்து அனைத்து பாடத்திட்டங்களையும் சர்வதேச நிலைக்கு கொண்டு வர தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் கல்வித்துறையில் புதிய இலக்கை அடைவதற்கு இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# இலங்கை பணவீக்கத்தை கட்டுப்படுத்த அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும்

## சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் தெரிவிப்பு

இலங்கைதனதுபணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்குரிய மூலோபாயத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென்று சர்வதேசநாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையானது, பிணை மீட்பு கடனாக 2.9பில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ள நிலையில் அவர் இதனைத் தெரி வித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் தனது நடவடிக்கைகளின் நம்பகத்தன்மையை பேணுவதற்கும் மூலோபாயத்தை உருவாக்குவதற்கும் பலமுனையில் செயலாற்ற வேண்டியுள்ளது.

நாடுகடுமையானபொருளாதார சமூகசவால்களை எதிர்கொண்டுள்ளது. உயர்ந்த பணவீக்கம் காணப்படுவதால் பொருளாதார மந்த நிலை நீடிக்கின்றது. குறிப்பாக கையிருப்பில் குறைவடைந்துள்ள அந்நிய செலாவணியால் நீடித்து நிலைக்க முடியாத பொதுக்கடன் நிதித்துறை பலவீனங்கள் ஆழமாக்கியுள்ளன. அரசகட்டமைப்புகளையும் ஏனைய அரச நிறுவனங்களையும் முறையான சீர்திருத்தங்களிற்கு உட்படுத்தவேண்டியுள்ளது. இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உரிய சீர்திருத்தங்களை விரைவாகவும் சரியான தருணத்திலும் முன்னெடுப்பது அவசியமாகின்றது.

சீர்திருத்தங்களிற்கான வலுவான உரிமையை கையிலெடுப்பதும் முக்கியமானதாகும். இந்த விடயத்தில் நாம் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராகவுள்ளோம் - என்றார்.

### அமெரிக்கா, தென் கொரியா மீது

# அணு ஆயுத தாக்குதலுக்கு தயாராக வடகொரியா அதிபர் கிம் அழைப்பு




அமெரிக்கா மற்றும் தென் கொரியா மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்தத் தயாராக இருக்கும்படி தனது நாட்டுப் படையினருக்கு அழைப்பு விடுத்தி ருக் கிறார் வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன். இது அணு ஆயுதப் போர் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா மற்றும் தென்கொரியா படைகள் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவை அச்சுறுத்தும் வகையில் வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

அதை பொருட்படுத்தாமல் அமெரிக்கா மற்றும் தென்கொரியா கூட்டுப்போர் பயிற்சியை தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவுக்கு எதிராக அணு ஆயுத தாக்குதல் நடத்த தயாராக இருக்கும்படி வடகொரியா படையினருக்கு அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் அன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்காவும் தென்கொரியாவும் அமெரிக்க அணு ஆயுதங்களை உள்ளடக்கிய கூட்டுப்போர்பயிற்சிகளைவிரிவுபடுத்தி வருகிறது. இதனை எதிர்கொள்ளவும், போரைத்தடுக்கவும் எந்த நேரத்திலும் அணு ஆயுத தாக்குதல்களை நடத்தத் தயாராகப் படையினர் இருக்கவேண்டும் என கூறி னார்.

இதனிடையே அமெரிக்கா மற்றும் தென்கொரியாவுக்கு எதிராக போராடப் படைகளில் சேர சுமார் 14 லட்சம் பேர் முன்வந்துள்ளதாக வடகொரியா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.



# ஹெலி வீழ்ந்து நொருங்கியதில் படையினர் 4 பேர் உயிரிழப்பு

கொலம்பியாவில் படையினர் பயணித்த உலங்கு-வானூர்தி ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 4 அதிகாரிகள் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்கநாடான கொலம்பியாவின் குயிப்டோ என்ற பகுதியில் படையினருக்கான தளவாடங்களை விநியோகம் செய்யும் பணியில் உலங்கு வானூர்தி ஈடுபட்டிருந்தது. அதில் ஒருபெண் உள்பட 4 படை அதிகாரிகள் இருந்தனர். அப்போது திடீரென அந்த வானூர்தி விமானியின் கட்டுப்பாட்டை இழந்துகீழேவிழுந்துநொறுங்கியது. அதில் இருந்த 4 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர்.

இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விபத்தில் உயிரிழந்த படை அதிகாரிகளின் குடும்பத்துக்கு அந்நாட்டின் அதிபர் குஸ்டாவோ பெட்ரோ இரங்கல் தெரிவித்தார்.

# மேலும் 9 ஆயிரம் ஊழியர்களை நீக்குகிறது அமேசான் நிறுவனம்




மேலும் 9 ஆயிரம் ஊழியர்களைப் பணி நீக்கம் செய்ய உள்ளதாக அமேசான் நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனா தொற்று பரவலுக்கு பிறகு ஏற்பட்டுள்ள பொருளாதார சூழல் காரணமாக ட்விற்றர், மெட்டா நிறுவனங்கள் தங் கள் நிறுவனங்களின் ஊழியர்களில் பெரும்பாலானவர்களைக் கடந்த ஆண்டு இரண்டாம் பாதியில் பணி நீக்கம் செய்தது. இதையடுத்து, அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்ட அமேசான் நிறுவனமும் கடந்த ஜனவரி மாதம் 18 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்திருந்தது. இந்த நிலையில், அமேசான் நிறுவனம் இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பில் அடுத்த வாரம் மேலும் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பணி நீக்கம் செய்ய உள்ளது. இது தொடர்பாக ஓரிரு நாட்களில் அதிகாரப் பூர்வ அறிவிப்பு வெளியாகும்.

இரண்டாம் கட்டமாக அந்த நிறுவனம் மேற்கொள்ளவுள்ள பெருமளவிலான ஆட்குறைப்பு நடவடிக்கை இதுவாகும்.

இவற்றில் பெரும்பாலான ஊழியர்கள் விளம்பரப் பிரிவு மற்றும் இதர பிரிவுகளில் பணியாற்றுபவர்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அறிவிப்பு அமேசான் நிறுவன ஊழியர்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

# தங்கச் சுரங்கத்தில் சூடு 9 தொழிலாளர்கள் சாவு

### ஆபிரிக்க நாட்டில் பரிதாபம்

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான மத்திய ஆப்பிரிக்க குடியரசு நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள பாம்பாரி நகரில் சீன நிறுவனத்தால் நடத்தப்படும் தங்க சுரங்கம் ஒன்று உள்ளது. ஞாயிற்றுக்கிழமை இந்த தங்க சுரங்கத்தில் தொழிலாளர்கள் வழக்கம்போல தங்கத்தை வெட்டி எடுக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் சிலர் சுரங்க தொழிலாளர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பி ஓடினர்.

கண்இமைக்கும் நேரத்தில் அரங்கேறிய இந்த கொடூர சம்பவத்தில் சுரங்க தொழிலாளர்கள் 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 2 பேர் படுகாயம் அடைந்தனர். உயிரிழந்த 9 பேரும் சீனாவை சேர்ந்தவர்கள் என தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்த கொடூர தாக்குதலுக்கு உடனடியாக யாரும் பொறுப்பேற்கவில்லை. அதே சமயம் இந்த நாச வேலையின் பின்னணியில் ரஷ்யாவை சேர்ந்த கூலிப்படை உள்ளதாக பாம்பாரி நகர பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

இதனிடையே தங்கச் சுரங்கத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 9 சீனர்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து, மத்திய ஆப்பிரிக்க குடியரசு நாட்டுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டுமென தனது குடிமக்களை சீன அறிவுறுத்தியுள்ளது.

# என்னைக் கொல்லப் பார்க்கிறார்கள் பாக். முன்னாள் பிரதமர் குற்றச்சாட்டு



நீதிமன்றத்தில் வைத்துத்தன்னைக் கொல்லப் பார்த்தார்கள் என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இன்ரான் கான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இம்ரான்கான்மீது தேசியகருவூலத்திலிருந்து வெளிநாட்டுத் தலைவர்களின் பரிசுப் பொருள்களை மலிவு விலையில் வாங்கி அவற்றை பெரும் தொகைக்கு விற்றுக்காசு பார்த்தார் என்பது உள்ளிட்ட 9 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த வழக்குகளுக்காக அவர் நீதிமன்றத்திற்கு வருகை தராத காரணத்தால் அவரைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. பொலிஸார் அவரைக் கைது செய்யவிடாமல் அவரது ஆதரவாளர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர். இதில் 50 பொலிஸாரும் இம்ரான் கானின் ஆதரவாளர்கள் பலரும் காயமடைந்தனர்.

இந்தக் களேபரங்களை அடுத்து சனிக்கிழமை இம்ரான்கான் நீதிமன்றத்தில் முற்பட்டார். அங்கு அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. அதற்கிடையில் நீதிமன்றத்தில் வைத்துத் தன்னைக் கொல்ல முயன்றார்கள் என்று அவர் தெரிவித்தி ருக்கிறார். "இஸ்லாமாபாத்தில் உள்ள நீதிமன்றத்தில் நான் ஆஜரான போது அந்த வளாகத்தில் அடையாளம் தெரியாத சுமார் 20 பேர் இருந்தனர். புலனாய்வு அமைப்புகளைச் சேர்ந்த அவர்கள் என்னை கொலை செய்ய வந்திருந்தனர். என்னை சிறையில் அடைக்க அவர்கள் விரும்பவில்லை. என்னை கொல்ல முயற்சிக்கிறார்கள். அப்படி நடந்தால் அதற்கு யார் பொறுப்பு? எனவே எனக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்ற விசாரணைக்கு காணொலி காட்-மூலம் ஆஜராக அனுமதிக்குமாறு தலைமை நீதிபதிக்கு கோரிக்கை விடுத்திருக்கிறேன்" என்று தெரிவித்தார் இம்ரான் கான். அவரது ஆதரவாளர்கள் பொலிஸார் மீது பெற்றோல் குண்டுகளையும், கற்களையும் வீசித்தாக்கியதை அடுத்து அவர் மீதும் அவரது கட்சி நிர்வாகிகள் மீதும் ஆதரவாளர்கள் பலர் மீதும் பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களை இஸ்லாமாபாத் பொலிஸார் சுமத்தியுள்ள நிலையில் தன்னைக் கொல்லப் பார்க்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

# அமெ. மினசோட்டா மாநிலத்தில் மாணவர்களுக்கு இலவச உணவு

### குழந்தைகள் உட்பட அனைவரும் ஆரவாரம்



அமெரிக்காவின் மின்னசோட்டா மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் மாணவர்களின் பசியைப் போக்க, காலை மற்றும் மதியம் என இரு வேளைகளிலும் இலவசமாக உணவு வழங்கும் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. அனைத்துத் தரப்பினராலும் இதற்குப் பெரும் வரவேற்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் முதலில் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. தற்போது அதற்கு மாநில ஆளுநரின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தீர்மானத்தை அங்கீகரித்த ஆளுநர் டிம் வால்ஸ் அதில் கையெழுத்திட்டதையடுத்து குழந்தைகள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஆளுநரைக் கட்டிப்பிடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்தத் திட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்து சட்டமானதையடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களுக்கு இலவசமாக காலை உணவு மற்றும் மதிய உணவை வழங்கு-வது, மாணவர்கள் மற்றும் மாநிலத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு நாம்செய்யும் சிறந்த முதலீடுகளில் ஒன்று என ஆளுநர் டிம் வால்ஸ் கூறினார்.

இந்தத் தீர்மானம் மின்னசோட்டா மாநிலத்தை குழந்தைகள் சிறப்பாக வளர்வதற்குரிய சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கான முக்கிய நடவடிக்கை என்றும் அவர் தெரிவித்தார்.

# புரதத் தேவையை பூர்த்தி செய்ய கோழிக் கால்களை உண்ணுங்கள்

### எகிப்து அரசின் அறிவிப்பால் மக்கள் அதிர்ச்சி

எகிப்தில் கோழிக் கால்களை மக்களை உணவாக உட்கொள்ளுமாறு அந்நாட்டு ஆட்சி அறிவித்திருப்பது மக்களின் கடும் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளது.

எகிப்து கடும் நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. அங்குள்ள மக்கள் தமது குடும்பங்களுக்கு மூன்று வேளை உணவு வழங்கக்கூட கடும்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் நோக்கில் கோழிகளின் கால்களை உணவாக எடுத்துக்கொள்ளும்படி ஆட்சியாளர்கள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

நாய், பூனைகளுக்கு உணவாகத் தூக்கி எறியப்படும் கோழிக்கால்களில் புரதச் சத்து அதிகம் உள்ளதால் அவற்றை சமைத்து உண்ண வேண்டும் என சமீபத்தில் அந்நாட்டு அரசு மக்களுக்கு அறிவுரை வழங்கியது.

இந்த ஆலோசனையால் அந்நாட்டு மக்களிடம் இருந்து அரசுக்கு எதிராக கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

மாட்டுக்கறி விலை அதிகமாக இருப்பதால், பலரால் வாங்க முடியாத நிலையில் கோழிக் காலை சாப்பிட எகிப்து அரசு பரிந்துரை வழங்கியிருக்கிறது

மார்ச் மாதம் 30% அதிகமாக பணவீக்க உயர்வால் பல நாடுகள் தத்தளித்து வருகின்றன. அப்படி பணவீக்கம் அதிகரிப்பதால் தத்தளிக்கும் நாடுகளில் நாடுகளில் எகிப்தும் ஒன்று.

பலருக்கும் அத்தியாவசி-யத் தேவைகளான சமையல் எண்ணெய், சீஸ் ஆகியவை விலையேற்றத்தால் ஆடம்பர பொருட்களாகி விட்டன. சில பொருட்களின் விலை குறுகிய நாட்களுக்குள் இரண்டு மடங்காக, மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

1 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை உள்ள எகிப்து, உள்நாட்டில்வளரும் உணவை விட அண்டை நாடுகளில் இருந்து உணவை அதிகமாக இறக்குமதி செய்கிறது.

தங்கள் நாட்டில் உள்ள கோழிகளுக்கு வழங்கப்படும் தீவனம் உட்பட பல பொருட்களையும் எகிப்து பிற நாடுகளில் இருந்தே வாங்குகிறது.

கோழியின் லெக்பீஸ் 90 எகிப்திய பவுண்டுகளாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது கோழி எலும்புகளும் விற்பனை செய்யப்படுகின்றது. சிக்கன் கால்களின் விலை எவ்வளவு தெரியுமா? ஒருகால் 20 எகிப்திய பவுண்டுகள்தான் என்று கிண்டலாகச் சிரிக்கிறார் குடும்பப் பெண்ணான வேதாத்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2023 இல் வெளியிடப்பெற்றது.